"போற்றுபவர் போற்றட்டும்;—புழுதிவாரித்,
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொருகருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர் வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா.

மலர் 1	சென்னை 18—9—1954 சனிக்கிழமை	இதழ் 12

திராவிடத்தின் பிரிவினைநாள் செப்டம்பர் 17!

"செப்டம்பர் 17!"—நமது கழகம் பிறந்த நாள்! பெரியார் பிறந்த நாள்; பெரியாரை விட்டு நாம் பிரிந்த நாள்-புதுக் கழகம் கண்ட நாள்'

"செப்டம்பர் 17!"—கடந்த ஆண்டு இதே நாளில் தான்-வினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது-தமிழ்த்தென்றல், நமது அருமை திரு. வி. க. நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். 26-8-1883-ல் பிறந்த அவர் தமது எழுபதாண்டை பூர்த்தி செய்துவிட்டு - நாற்பதாண்டு பொதுப் பணியுமாற்றிவிட்டு விடை பெற்றுக்கொண்டார்; மீளா உலகத்தில் ஆழ்ந்துவிட்டார்.

அவர் நமது இயக்கத்தில் இல்லை! எனினும், நம்மில் ஒருவராக வாழ்ந்து வந்தார். திராவிடர் இயக்கத்தில் இல்லாதவர்; ஆனால், இறுதி வரையில் திராவிட மக்களின் நல்வாழ்வுக்காகவும் திராவிடம் தனி நாடாக-சாஷலிஸக்குடியரசாக வேண்டுமென்றும் பாடுபட்டவர்-ஏடெல்லாம் முழங்கியவர். அவர் நாத்திகரல்ல; ஆனால் சுயமரியாதைக்காரர் - "மெட்டீரியலிஸ"த்தை நன்குணர்ந்தவர். அதன் காரணமாக அன்பும் அறிவுமே ஆண்டவன் என்று சைவத்திற்கு விளக்கம் தந்தவர். புதுமை கண்டு அஞ்சாது வரவேற்றார்.

அவர் வாழ்நாள் முழுவதும் சமூகக் கொடுமைகளை - மத மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடினார். பொருளாதார சமத்துவத்துக்காக பாடுபட்டார். அந்நிய ஏகாதிபத்திய-வடநாட்டு முதலாளித்வ பிடியினின்றும் திராவிடம் பிரிய வேண்டுமென்று முழங்கினார்.

தமிழகத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை பரப்பிய முப்பெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். காந்தியத்தைப் பற்றிப் பேச அஞ்சி நடுங்கிய காலத்தில் தமக்கே உரிய தனித்தமிழ் நடையில் எழுதி - "தேசபக்தனை" யும் "நவசக்தி"யையும் நாட்டில் நடமாடச்செய்தார். ஆங்கில மொழி மோகம் தலைவிரித்தாடிய காலத்தில் இனிய தமிழில் பேசி மக்களைக் கவர்ந்தார்.



தமிழ் காத்த திரு வி. க.

பெண்ணடிமையைப்போக்க பாடுபட்டார்; "பெண்ணின் பெருமை"யை நாட்டு மக்களுக்குப் போதித்தார்.

ஒரு சிறு கூட்டம் "கலை கலைக்காகவே" என்று கூப்பாடு போட்டபோது, "கலை வாழ்க்கைக்காகவே" என்று கூறினார். பட்டினிப் பட்டாளத்தை ஒழிக்கும் கலையே தம்சொந்தக் கலை-அதுவே வாழ்க்கைக்கலை, உயர்ந்த கலை என்றெல்லாம் முழங்கினார். நம் நாட்டில் விஞ்ஞானக்கலைவளர வேண்டுமென்று விரும்பினார். நம்நாடு பழம் பெருமையோடு பிற நாடுகளோடு சம நிலையில் உயர வேண்டுமானால் தமிழ்க்கலையில் விஞ்ஞானக்கலை நிறைய வேண்டுமென்றார்.

அவர் தமிழ் மக்களின் நல் வாழ்விற்காக-தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்காக தமது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். அவர் பேசாத பொருளில்லை! அவர் போகாத இடமில்லை! எந்தக் கூட்டத்திலும் பேசுவார்! நாட்டின் நாலு பக்கங்களிலும் அச்சமற்று உலவினார்! எந்தக்கட்சி கூட்டமாயினும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக தமது கருத்தைத் தயங்காது கூறிடுவார்! அவர் மறைந்தார், அவர் நமக்கும் நாட்டு மக்களுக்கும் விடுத்திருக்கும் செய்தி மறைந்து விடவில்லை. தமிழ்மக்களின் நல்வாழ்விற்காக அவர் காட்டியுள்ள பாதையில்-இட்ட கட்டளையை நிறைவேற்ற அவரது நினைவுநாளில் - நாம் உறுதி கொள்வோம்-சபதம் ஏற்போம்!

—"**நாதன்**"

திரு. வி. க. நினைவுநாள் செப்டம்பர் 17!

ஒடுங்கிக் கிடக்கும் உடற் கூட்டினுள் உள்ளத்தைத் தனிக்கவிட்டு, விடுதலைவராதா என்று ஏங்கிக் கிடக்கும் திராவிடப் பெருங்குடி மக்களே! நம் வாழ்வை வளமாக்கி, சுதந்திரப் பறவைகளாக நம்மை உலவவிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செப். 17-ம் நாள்! அது நம் நினைவில் நிலைக்குமாக!

"வெள்ளையன் போனான்; கொள்ளையன் வந்தான். பிள்ளையை விற்கும் பிழைபாடு நேர்ந்தது. கொள்ளையைத் தடுத்து, கூண்டினை உடைத்து நல்லவர் வாழ, நலம்பல காண இல்லையோ ஒரு நாள்? எது அந்தத்திருநாள்?" என்று தவித்திருந்த நமக்கெல்லாம் தித்திக்கும் ஒரு நாள்; திராவிடர் திருநாள்; செப்டம்பர் பதினேழாம் நாள்! அந்த நாளிலே அடுத்து வரும் போருக்கும் நம்மை ஆளாக்கிக் கொள்ள உறுதி கொள்வோமாக!

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; துஞ்சோம்! இனி அஞ்சோம்!" என்று வீறு கொண்டெழ, இந்த நாளிலே விரதம் பூணுவோமாக!

* * *

விண்ணிலே சிறகடித்துச் செல்லும் வானம்பாடிப் பறவையின்
உற்சாகம் என் காதுகளிலே
பாட்டாகப் பாய்கிறது.
தாவிச் செல்லும் கலைமானின்
சுயேச்சை
என் கண்களிலே ஆனந்தமாகப்
படுகிறது!
வல்லூருக்குத் தப்பிய வெண்
புறா உல்லாச கீதம் பாடுவது
எனக்குக் கேட்கிறது.
மலையருவி, தடுப்பாரில்லாமல்
பாய்ந்தோடுவது
எனக்கு புதிய உணர்வைத்
தருகிறது.
நானும் அதுபோலவாழ ஆசைப்
படுகிறேன்.
என் தோழர்களுக்கும், சகோ
தரர்களுக்கும், இனத்துக்கும்
இந்த வாழ்வு கிடைக்காதா
என்று எண்ணுகிறேன்!
அந்த உறுதியைத்தருவது எந்த
நாள் என நினைக்கிறேன்.
செப்டம்பர் 17ட என் கண்
முன்னே வருகிறது!
ஓ! என் சகோதரரே! ஒரு நாள்
நமக்கு விடுதலை வரப்போகிறது!
அந்த நாள் வெகு தூரத்தில்
இல்லை!

அறிவுநிறை செம்மல்-என் அண்ணன்- நம் மூத்தோன்- காஞ்சிச் செல்வம்- அணிவகுப்பைப்பார்வையிட்டு, 'நடங்கள்!" என்று உத்தரவிடும் நாள் வெகுதூரத்தில் இல்லை! அதோ! நம் கண்ணுக்குத் தெரிகிறது!

யார் இவர்?—மதுரைத்
தம்பி!
இவர் யார்?—புதுவைத்
தம்பி!
இவர் எவர்?—காரைக்குடி
—யார்!
எந்த ஊர் இவர்?—வேலூர்
வீரர்!
அவர் யார்?—தஞ்சைச்
சிம்மம்!
இவர்?—திருவாரூர்த்தீரர்!

போரிலே உறுதி உண்டா? மலைகுலைந்தாலும் மனங்குலையாதவர்கள் இவர்கள்!

எதிர்த்து நிற்பார்களா?—ஓ! சாகும் வரையிலும்! சரி! புறப்படட்டும்!

படை புறப்படுகிறது!

—இந்தக் காட்சியை நாம் காணத்தான் போகிறோம்! அந்த நாள் விரைவில் வரத்தான் போகிறது!

செப். 17! நம்மைத் தட்டிக் கொடுக்கிறது!

* * *

இலவசமாகக் கொடுத்து விட்டு, கடனாகத் திரும்பப் பெருவதை எவ்வளவு நாள் சகிப்பது?

வந்தவனெல்லாம் கோலோச்ச, இந்த நாட்டான் பாழாவதை எத்தனை காலம் பொறுப்பது?

நம் தோல் எருமைத்தோல் அல்ல!

எட்டி உதைப்பாரைக் கட்டிப் பிடித்துப் பிச்சை கேட்க நாம் இழிந்த போக்கினர் அல்ல!

இழான வார்த்தை சொல்லி, ஏறி மிதிப்பாரை எதிர்ப்போம்; கொள்கைவாளினை எடுப்போம்!

* * *

செப்டம்பர் 17!

உறுதியைத்தந்து, அண்ணாவின் தம்பிகளை வைரம்பாய்ந்த நெஞ்சினர் ஆக்கும் பெருநாள்!

திராவிட நாடு பிரிவினை நாள்!

வாழ்க திராவிடம்! வாழ்க என் தாயகம்!

காதலிக்கு!

அன்பே! நின்றன் மடல் கண்டேன்
அகத்து ணர்வின் நிழலெல்லாம்
இன்ப துன்ப உருவங்கள்
எழுத்தில் இழையும் நிலைகண்டேன்
துன்பம் தொடரும் இவ்வுலகை
துறந்து வாழும் வகையுண்டே!
அன்பே நீயும் நானுமிவண்
அமைக்கும் காதல் வாழ்வுலகே!

மண்ணில் உதித்த பொருளெல்லாம்
மனிதன் கையில் கிடைத்து விடின்
எண்ணக் கூட்டின் பயன்பொருள்கள்
எவையும் வீணே அமைந்ததில்லை
விண்ணும் மண்ணும் ஓரில்லம்
வாழ்வே கலையாய் அமைந்திட்டால்!
உண்மை இதுவாம் உள்ளத்தே
உன்னி நீயே எண்ணிப்பார்!

அன்பில் இணையும் உள்ளங்கள்
அழியா இன்ப உலகமடி!
அன்பு நிலைத்த மக்களிடம்
அகமும் புறமும் தூய்மையடி!
அன்புக் கென்றும் அழிவில்லை
அன்பே வாழ்வை அமைக்குதடி!
இன்ப வாழ்வே அன்புலகில்
இரண்டு ளத்தின் திட்டமடி!

எண்ணம் செயல் இரண்டும்நம்
இலக்கிய வாழ்வில் அமைந்திட்டால்
மண்ணில் வாழ்வு மாண்புயரும்
மனதோ வாழ்வின் காலத்தை
எண்ணி எண்ணி இசைபாடும்
இளமை கற்கும் கற்றதனை
மண்ணில் நாமும் உணர்ந்திட்டால்
மலர்ந்த வாடா மலராவோம்!

த. கோவேந்தன்.

அரங்கண்ணல்-ஆண்டாள் திருமணம்

சென்ற 9-9-54-ந்தேதி வியாழக்கிழமை, திராவிட நாடு துணை ஆசிரியர் தோழர் அரங்கண்ணலுக்கும், தோழியர் ஆண்டாளம்மைக்கும் விருத்தாசலத்தில் திருமணம் நடைபெற்றது. அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர். தோழர் அரங்கண்ணலும் அவர் தம் துணைவியாரும் நீடு வாழ்கென வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்.

கேடு விலக, கீழ்நிலைமாற, நாடு பிரித்தல் நம்கடன்

திராவிடமே மருந்தென்றார், தமிழ்த் தென்றல் திரு வி. க!

வாழ்க அவர் புகழ்! வாழ்க அவர் தமிழ்! வாழிய நீடூழி!

நான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் படத்தைத் திறந்து வைப்பேன் என்றார் மாநாட்டுத் தலைவர். இத்தனிப் பேற்றினை வழங்கிய அன்பர்களுக்கு எனது நன்றி உரியதாகுக. நான் இங்கு எக்கட்சியின் சார்பிலும் வரவில்லை; நான் எக்கட்சியையும் சார்ந்தவனல்ல.

சிலர் நினைக்கின்றார்கள், திரு. வி. க. வுக்கு ஒரு கட்சி கிடையாது; ஒரு கொள்கை கிடையாது; எங்கும் போவார்; எவர் படத்தையும் திறப்பார்" என்று! எனக்கு கொள்கை உண்டு என் கொள்கை என் கையில் இருக்கிறது; ஏழைமக்கள் கையில் இருக்கிறது; பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது! நான் சாதி, சமய, நிற, மொழி, நாடு முதலிய எல்லா பேதங்களையும் கடந்தவன். பொது மக்களின் சுக வாழ்வுதான் எனது குறிக்கோள். ஒவ்வொரு மனிதனையும் சுயேச்சையுடன் வாழ, உயர்த்த எக்கட்சி பாடுபட்டாலும் அங்கெல்லாம் நான் போவேன், வருவேன், பாடுபடுவேன்.

நான் காங்கிரசில் மிகத் தொண்டு செய்தவன். நாட்டில் காங்கிரஸ் வீழ்ந்துபட்ட காலத்திலெல்லாம் தொண்டு செய்தவன். பின் ஏன் காங்கிரசை விட்டு விலகினேன்? கொள்கையில் வேறுபாடா? முறண்பாடா? அல்ல, அல்ல, அல்ல. காங்கிரஸ் காரிய கமிட்டிக்கு அடிமையாக இருக்க விரும்பவில்லை யென்ற காரணந்தான். காங்கிரசின் பாசிசக் கொள்கையும், பிற்போக்கான சுயநலப் போக்கையும் கண்டித்தே வெளியேறினேன்.

பரந்த நோக்குடன் காங்கிரசில் பாடுபட்டு உழைத்த எனது நண்பர் ஈ. வே. ராமசாமிப் பெரியாரும் விலகினார். ஏன்? இதே காரணங்களுக்காகத்தான். வ. உ. சிதம்பரனாரும் வெளியேறினார். ஏன்? உரிமை, உரிமை, உரிமை மறுக்கப்பட்டது; பிரிந்தோம். தனிமனிதனின் உரிமையை காக்கவே நாங்கள் பிரிந்தோம். காங்கிரஸ் காரியக்கமிட்டியின் பாசிசக் கொள்கையை வெறுத்தே வெளியேறினோம், காங்கிரஸ், பதவி வேட்டையாடும் சுயநல வாதிகளின் பிடியிலே சிக்கிக்கொண்டுள்ளது. காங்கிரஸ் பாசிசப் போக்குடன் செல்கிறதா, இல்லையா என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரையே கேட்கிறேன். இல்லையென்று திரு. காமராஜர் கூறுவாரா?

“சமதர்மம்தான் காங்கிரஸ் கொள்கை” என்று வாய் தவறி காமராஜர் கூறிவிட்டார். காங்கிரசின் கொள்கை சமதர்மம் அல்ல, அல்ல, அல்ல என்று நான் கூறுகிறேன். அவர் வெகு சுலபமாகச் சொல்லிவிட்டார். இவ்வளவு வயதான எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறுகிறேன் காங்கிரஸ் சமதர்மத்தை நாட்டுவது எவ்வளவு கடினமென்று! காமராஜ் அவர்கள் அதை ஏற்று நடத்துவாரானால் அவருக்குப் பின் தொண்டனுக்குத் தொண்டனாக பணிசெய்யத்தயார்!

சுயநலவாதிகளிடம் சிக்கிக் கொள்ளும் எக்கட்சியையும் அந்தப் பிற்போக்காளர்களிடமிருந்து மீட்க வேண்டும், வ. உ. சி. இதே நோக்கத்துடன்தான் அன்று காங்கிரசில் போராடினார்.

வ: உ, சி. அவர்கள் சைவர், ஆனால் வடநாட்டுச் சைவத்தைப் பின்பற்றுகின்ற, திருவாடுதுறை, திருப்பாதிரிப்புலியூர் மடத்தார் போற்றுகின்ற சைவமல்ல, சாதி, சமய வழக்குகள் தென்னாட்டுச் சைவத்தில் இல்லை. “எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு; எல்லோரும் ஓர் குலம்” என்பதே வ, உ. சியின் கொள்கை. தென்னாட்டு மகாஜன சபை உண்மையில் வடநாட்டுக் காங்கிரசை எதிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது ஆனால், அது இன்றைக்கு அக்கொள்கைக்கு முரண்பட்டு செயலாற்றுகிறது.

வ. உ. சிக்கு காந்தீயத்தில் நம்பிக்கையில்லை. அவர் கதர் கட்டமாட்டார். “கதரில் நம்பிக்கையில்லை” என்று பச்சையாக சொல்லுவார்?.

அவர் அறவாள் வைத்திருதார். அதுதான் அறிவு நிறைந்த திருக்குறள் வாள், திருக்குறளின் உண்மைகளை அறியாத துர்ப்பாக்கியத்தால் தான் இத்திருநாடு அதன் சிறப்பை இழந்தது.

வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித்தியாகம் தமிழர்களின் நாகரீகத்தையும் கலைப் பண்பையும் பாழ்படுத்தி விட்டது. ஒன்றின் மீது அளவற்ற பைத்தியம் பிடித்து அலைவது சகஜமாய் விட்டது. உதாரணமாக, நமது மாகாணத்தின் மந்திரிகளில் ஒருவர் தமிழர்களின் கலைப் பொக்கிஷமான குறளிலிருந்து காதல். மணவாழ்க்கை ஆகிய பகுதிகளை எடுத்துவிட வேண்டும் என்று சொல்லும் அளவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. தமிழர்களின் பண்பு நமது மந்திரியாருக்குத் தெரியாதென்றுதான் நினைக்கிறேன்!

வ. உ. சியின் தொண்டினைப் பற்றிப் பேசப்பேசநம்நாட்டில் தன்னம்பிக்கை உண்டாகும். அப்போது நேருவின் கண்காணிப்பு தேவையில்லை. படேலின் உதவியும் வேண்டியதில்லை! (நீண்டநேரம் கைதட்டல்)

தமிழன் இன்று தன்னைத் தானே ஆட்சிசெய்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறான் தமிழ்நாடு தமிழருக்கானால். ஆந்திரநாடு பிரியும், மலையாள நாடு பிரியும், கன்னட நாடும் பிரியும். எல்லாம் தனித்தனியாகப் பிரிந்து போனால் பிரிந்த சில மாதங்களுக்குள் என்ன ஏற்படும்?

ஆந்திரர்கள் “அச்ச தெலுங்கு காவல்” (சுத்த தெலுங்கு வேண்டும்) என்பார்கள். மலையாளிகளும் சுத்த மலையாளம் வேண்டும் என்பார்கள். கன்னடியர்களும் அப்படியே, அப்பொழுது சுத்த தெலுங்கில் 100க்கு 90 தமிழ்ச் சொற்களாக இருக்கும்! சுத்த மலையாளத்தில் 100க்கு 95 தமிழும், அப்படியே கன்னடத்திலும்அமையும், அதும்போது மொழியால் எல்லோரும் ஓர் இனம் என்பதை உணர்வார்கள்; இன்பத்தால் ஒன்றென்று அணைவர்.

எனவே, இப்பொழுதுதமிழ் நாடு, ஆந்திர நாடு, மலையாள நாடு, அதற்குப்பிறகு என்ன? (கூடியிருந்த மக்களின் பெரும் பகுதியினர் “திராவிடநாடு திராவிடிருக்கே!” என்று விண்ணதிர முழங்கினர். பெரும் ஆராவாரம்!

ஆம், அடுத்து திராவிடநாடு ‘‘திராவிடருக்கே” ஆகும். நெடுநேரம் கைதட்டல்.)

இப்பொழுது வடவேங்கடம் எல்லை. பிறகு இன்னும் விரியும். மராட்டியரும் கண் விழிப்பர். அவர்களும் மொழியால் திராவிடர், இனத்தால் திராவிடர் என்பதை உணர்வர். இப்பொழுதும் அவர்கள் இருப்பிடத்தை தட்சிணம் என்றுதான் சொல்லிக்கொள்கின்றனர்.

அப்போது நமக்கு வடக்கு எல்லை வடவேங்கடம் அல்ல விந்தியமலையாக விளங்கும். இதுதான் முடிவு. “தமிழ்நாடு தமிழருக்கே! திராவிடநாடு திராவிடருக்கே!” என்பதாகும். (நீண்ட கைதட்டல்)

இதை அடைவதுதான் தமிழனுக்குப் பெருமை. வடநாட்டுப் பாசிசத்தைத் தமிழன் இன்று தாங்கி, திணறவேண்டியிருக்கிறது (கைதட்டல்) இதையே நான்கடலூர்மாநாட்டிலும் கூறியிருக்கிறேன்.

சாதி, சமய, உயர்வு, தாழ்வுகளையொழித்த சமதர்மமே எனது கொள்கை.

வெள்ளையனுக்குத் துணையாக இருந்துகொண்டு வடநாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப்படைக்கின்றது. அதற்கு இடம் தராதே, தராதே, தராதே! இந்த வடநாட்டுப் பாசிசத்தை ஒழிப்பதுதான், எந்தக் கழகமாயிருந்தாலும், அக்கழகத்தின் முதல்வேலையாக இருக்கவேண்டும். —

(சென்னை, 9—11—47).

வாழ்கிறது வடநாடு! தாழ்கிறது தென்னாடு!

சிந்துவுக்கு அருகில் கச் பிரதேசத்தில் காந்தி தாம் என்று ஒரு நகரம் அகதிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

பரிதாபாத் என்னுமிடத்தில், மோட்டார் இணைக்கும் தொழிற்சாலை, கார்பன்-சைக்கிள் தொழிற்சாலை ஆகியவை கள்இணைந்திரும்புத்தொழிற்சாலை ஒன்று அகதிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு வருகிறதாம்.

பல்வேறு இடங்களில் பல்வேறு தொழிற்சாலைகளும் காலனிகளும் அகதிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கிறதாம்—அமைக்கப்பட்டு வருகிறதாம்.

மான்யம் அல்லது கடன் என்று கோடிக்கணக்கான ரூபாய்கள் அகதிகள் பலருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதாம்—பல வேலைகளும் சலுகைகளுடன் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறதாம்.

இதுவரை அவர்களுக்காக 500 கோடி ரூபாய்க்குமேல் செலவிடப்பட்டிருக்கிறதாம்—மேலும் பல கோடி ரூபாய்கள் செலவிடப்பட இருக்கிறதாம்.

இத்தனையும் போதாதென்று மேற்கு வங்க அகதிகளின் வாழ்வைப் புனரமைக்க 32 கோடி செலவில் மூன்று ஆண்டு திட்டம் ஒன்றை மத்திய அரசாங்கம் நடத்தப் போகிறதாம்.

அகதிகள் என்றால் ஆதரவற்றவர்கள், அனாதைகள், வாழமுடியாதவர்கள், வாழ்விழந்தவர்கள் என்றெல்லாம் பொருள்படும். ஆகவே இந்தியாவில் உள்ள இத்தகையவர்களுக்கு இந்திய அரசாங்கம் உதவுவதை அறிந்து மகிழ்வு கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் இந்திய அரசாங்கம் கணித்திருக்கிற அகதிகள் அத்தனைபேரும் உண்மையான அகதிகளா? அவர்களுக்கு அவசியம் உதவி தேவையா? என்ற வினா முளைக்கும்போது தான் விளக்கம் விரிகிறது—வேதனை வளர்கிறது.

ஏனெனில் அரசாங்க உதவி பெறும் அந்த அகதிகள் அத்தனைபேரும் உண்மையான அகதிகள் அல்லர்-முக்கால் வாசிக்குமேல்அந்தப்போர்வை இருளிலே மறைந்து நிற்கும் கள்ளர், என்று துணிந்து கூறமுடியும் - அந்தப் பெயரைக் கூறிக்கொண்டு மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தை கோடிகோடியாகக் கொள்ளையிடும் கயவர் என்று அடித்து ஆதாரம்தரமுடியும்.

அந்த அளவுக்கு அகதிகள் என்று 'அரசாங்கத்தாரால் அறிவிக்கப் பட்டவர்கள்' ஆனந்த வாழ்வு நடத்துகின்றனர்.

சென்னை, சேலம், கோவை போன்ற நகரங்களிலே வாழ்விழந்தவர்கள் என்று கூறிக் கொண்டு வந்திறங்கும் இவர்கள் வாழமுடியாதவர்களாக வா காட்சியளிக்கின்றனர்? வாழ்க்கையின் இன்ப மாடி மீது செல்வ உல்லாசத் தென்றலிலே சல்லாபமாக உலவும் நாகரீகத்தின் வாரிசுகளாக வன்றோ தோன்றுகின்றனர்.

இவர்கள் வாழமுடியாதவர்கள் என்று சொன்னால் யார் ஏற்றுக்கொள்வர்?

ஆனால் மத்திய அரசாங்கம் வாட்டமறியாது பவனிவரும் அந்த 'ஆதரவற்ற (?)' மனிதர்களையும் பாருங்கள்.

உண்மை அகதிகள் யார் என்பது தெரியும்!

தென்னாட்டின் தங்கச் சுரங்கமாம் நெய்வேலியிலே இரத்தத்தை வியர்வையாக்கி ஓடவிடும் தென்னாட்டு உழைப்பாளியையும் பாருங்கள்; அவனை அதிகாரம் செய்து ஆடம்பரமாகச் செல்லும் வடநாட்டு அகதியையும் பாருங்கள்!

மாடுபோல் உழைக்க முன் வந்தாலும் மதித்து கொடுக்காததினால் மனம் பதறி, வயிற்றைக்காக்க வழியெல்லாம் கைநீட்டித்திரியும் தென்னாட்டுத் தொழிலாளியைப்

> விரைவில் வரும்! சுவைமிக்க தொடர்கதை!
>
> 'எமிலி சோலா'வின்
>
> ## காதலோ காதல்
>
> தமிழ் ஆக்கம்: ரா. வெங்கடசாமி
>
> தெள்ளுதமிழ் நடையில் வரும் அருமையான காதற்கதை

கூறுகிறது - அவர்களுக்காகப் பணத்தை ஆறாக ஓடவிடுகிறது!

வானின் வஞ்சத்தால் நிலம் மட்டுமின்றி நலமும் வரள, வறுமையால் வீதி வீதியாக அலையும் விவசாயிகள்; பாடுபடத் திறனிருந்தும் வேலை கிடைக்காது பட்டினியால் பதறும் பாட்டாளிகள்; 'தேனோடும்' நாட்டிலே மானத்தோடு வாழ வழியில்லாமல் மலேயா, பர்மா, பீஜித்தீவு போன்ற வேற்று நாடுகளுக்கு விதியற்ற அடிமைகளாய் சென்று வாடி வதங்கும் உழைப்பாளிகள்;

இவர்களையும் பாருங்கள்; பட்டுடை பூண்டு படாடோபத்தின் சிகரமாக, பசியின் பாருங்கள்; சோலையிலே அந்த மாலையிலே உல்லாசமாகச் சுற்றும் வடநாட்டு அகதியையும் பாருங்கள்!

வாழவேண்டிய இந்நாட்டு மன்னன் வழியில்லாமல் வயிற்றைக் கையிலே பிடித்துக் கொண்டு டிக்கட் இல்லாமல் ரயிலிலே செல்வதையும்பாருங்கள்; இரயில்வே ஊழியன் என்ற முறையில் அவனைப் பிடித்து அடித்து இழுத்துச் செல்லும் அகதியையும்பாருங்கள்!

யார் உண்மையில் வாழமுடியாதவன்?

இப்படிப் போக வாழ்வு நடத்தும் அந்தக் கள்ளர்களைக் கோலாகலமாக வாழச் செய்ய எண்ணுகிறது மத்திய அரசாங்கம்—காரணம் அவர்கள் வடநாட்டினர்—வடநாட்டோடு உறவுகொண்டவர், என்பதால்!

ஆனால் உண்மையிலேயே அகதிகளாக, அனாதைகளாக, வீதிவீதியாகவும் வெளி நாடுகளுக்கும் செல்லும் இந்த விதியற்றவர்களை ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறது அதே அரசாங்கம்—காரணம். இவர்கள் தென்னாட்டவர்.

அகதிவாழ்கிறான்-இந்நாட்டு மன்னன் தாழ்கிறான், இல்லை தாழ்வடையச் செய்யப்படுகிறான்.

இந்த இலட்சணத்தில் எழுந்து நிற்கிறது 'ஏக இந்தியா!'

ஆனால் அது ஏக இந்தியா அல்ல, போக இந்தியாவாக வடநாடும், சாக (சாகும்) இந்தியாவாகத் தென்னாடும் ஆகி வருகிறதுஎன்பதுதான் இன்று நாடு அறிந்து வரும் உண்மை.

ஒரு நாட்டின் மத்திய அரசாங்கம் என்றால் அது நாடு முழுமையும் ஒரே கண்ணோட்டத்தைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

ஆனால் இந்தியாவின் மத்திய அரசாங்கமோ சுண்ணாம்பும் வெண்ணையும் வைக்கும் செயலிலே சென்றுகொண்டிருக்கிறது. வடநாட்டின் நலனிலேயே நாட்டமும் அக்கறையும் கொண்டு தென்னாட்டைப் பற்றி நினைக்காமலேயே செல்கிறது.

வடநாட்டு அகதிகளிடம் அத்துனை பரிவும் பாசமும் காட்டுகிற மத்திய அரசாங்கம் தென்னாட்டு அகதிகளிடம் அதில் கொஞ்சமாவது காட்டியிருக்கிறதா? இல்லை - ஏன் அவர்களைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

தென்னாட்டிலே அகதிகள் என்ற உடன் ஒரு சிலருக்குத் தென்னாட்டில் ஏது அகதிகள் என்று தோன்றும்.

தென்னாட்டில்—திராவிடத்தில் அகதிகள் இருக்கிறார்கள் அதுவும் அகதிகளை விடக் கேவலமான நிலையிலே இருக்கும் அவர்கள் தொகை தென்னாட்டிலே பாதிக்குமேலிருக்கிறது.

அவர்கள் வேறுயாருமல்ல-இந்த நாட்டை வாழவைக்கும் விவசாயிகள்!

—சிந்தனைச் செல்வன்

ஏக இந்தியா போர்வையிலே ஏமாற்றுக்காரர்கள்!

இலக்கியத்தில் காதல்

காரை முத்துப் புலவர்

[28-8-54 இதழ்தொடர்ச்சி]

இப்படி வளர்ந்த சிந்தனை, அவளை மீண்டும் காணத்துடிக்கிறது. அவளது தோழியின் மூலம்மாலை அனுப்ப முயல்கிறான். தோழி மறுக்கிறாள். கடைசியில் அவன் துணிந்து மடலேற முடிவு செய்கிறான்.

இதுதான்கதை

இதை மனதில் வைத்துக் கொண்டால், மடல் இலக்கியம் பிடிபடும். மற்றப்படி, "மடலாவது..." என்று ஆரம்பித்து 'போர்' அடிக்க நான் தயாராக இல்லை. ஏனென்றால் நமக்கு அது இந்த இடத்தில் தேவை இல்லை. நிற்க.

* * *

அருமையான பூங்கா; ஒரு இளைஞன் வருகிறான் அங்கே; அன்பினால் ரத்தந்தெறிக்கும், என்பதுபோல் மெல்லிய உடல் கொண்ட பூங்கொடி ஒருத்தி நிற்கிறாள். பயலுக்கு உடம்பு துடிக்கிறது; உள்ளம் தந்தியடிக்கிறது; யார் இவள்? தேவலோகத்துப் பொதுச்சரக்காகிய ஊர்வசியோ? அவளுக்குமேல் அதிகம் பேர்களைச் சந்தித்த ரம்பையோ?" என்றெல்லாம் நினைக்கிறான். பூமியிலே இதுபோன்ற பெண்ணு, என்று அதிசயிக்கிறான். கடைசியில் கால்களைப் பார்க்கிறான். கால்கள் பூமியிற்பட்டு நிற்கின்றன. அவன் கேட்ட கதையெல்லாம் தேவலோகத்தில் பெண்கள், அந்தரத்திலேயே சகல காரியங்களும் பார்ப்பார்கள்; அவர்களது கால்கள் "நிலம் பாவா" என்பதுதான். ஆகவே, பூமியிற் பாதம் பட்டிருப்பதால் இவள் மானிடப் பெண்தான் என்று தீர்மானிக்கிறான். கிட்டப்போகிறான். இமை கொட்டாமல் பார்க்கிறான். 'கண்ணே' என்கிறான்; தடுமாறுகிறான். "நான் உன்னை 'லவ்'வுகிறேன்; நீ சம்மதி!" என்கிறான். அவள் பேசாமல் போய்விடுகிறாள். அவன் விரகதாபத்தோடு அலுத்துத் தூங்குகிறான். கனவிலும் அந்தக்காரிகை வருகிறாள். காதல் தருகிறாள்; மறைந்து விடுகிறாள். "இனிப் பொறுப்பதில்லை" என்று பயல் எழுகிறான். ஊரரிய மடல் ஏறி அவளை மணப்பது என்று தீர்மானிக்கிறான். சம்பவம் இவ்வளவுதான். இதை உவமைக் காவியமாகச் சமைத்திருக்கிறான், காளமேகம்.

* * *

பூங்காவிலேயே நிற்கிறாளே அந்த மோகனக்குமாரி; அவளது உருவம் எப்படி இருக்கிறது? அணு அணுவாகப் பிளந்து காட்டுகிறான், கவி வாசாலகமாக வார்த்தைகளைக் கொட்டுகிறான். அத்தனையையும் அப்படியே வைத்துக் கொண்டு, நாமெல்லாம் நமது மனைவியரிடம் சென்று வர்ணித்தால் அவர்கள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் தெரியுமா!

"ஏ! பெண்ணே! என் மனைவியே! நீ எப்படி இருக்கிறாய், தெரியுமா? கட்டாத பூமாலை; தட்டாத பொற்பாவை! யாருக்கும் எட்டாத பச்சை இளந்தோகை! கற்பகப்பூமாமாலையிற் பிறவா வாச வண்டு! வேந்தரிடம் இல்லாத செல்வம்; மேகம் சேராத மின்னல்; படித்துச் சொல்லாமல், தானே பேசும் கிள்ளை; நவரசம்; சுவைபெற்ற தீபம்; தெவிட்டாத தேன்; உதிராப் பூங்கொம்பு; தாபந்தணிக்கும் தனி மருந்து; கலவி என்னும் பதவி தரும் தெய்வம்! ஆகா வட்டமுகக் கட்டழகுப் பெட்டகமே! வாடி இந்தப் பக்கம்! தாடி ஒரு முத்தம்! மோடி வேண்டாமே மானே! ஜோடிக் காதலர் நாமே! ஆடி மகிழ்வோம் வாடி"! — என்று மனைவியரிடம் பேசிப்பாருங்கள். அன்றைய பொழுக்கை 'ஜாலி'யாகவே இருக்கும்! காளமேகம், பாட்டுடைத்தலைவியைப்பற்றி அவ்வளவும் சொல்கிறான்.

அவளுக்கு எதை உவமை கூறலாமென்றால், பளிங்கு, கண்மணி, கண்ணாடி ஆகிய வற்றில் அவளுடைய உருவத்தையே காணலாமன்றி வேறு கூறமுடியாது. அங்கம் அங்கமாகச் சொன்னால்...?

......கரிக்குலத்தின்
நாட்டங்களெல்லாம் நடுங்கப்
பெருந்தவத்தோர்
கூட்டங்குலைக்கும் குவிமுலை
யாள்!—நாட்டை
அளவிடும் பச்சைசெத்துளவோன்
ஆலிலையென்றே கண்
வளர இடம் பார்க்கும்
வயிற்றான்!
...மாமுலையாம்
கைத்தாளஞ்சுற்றிய நீலக்கயிறு
நால்வதென
வித்தார ரோமம் விளங்குவாள்
—முத்தாற்றில்
வெள்ளஞ்சுழிக்கும் வியன்சுழி
போல் மேதினியோர்
உள்ளஞ்சுழிக்கின்ற உந்தியாள்
—தெள்ளியதோர்
வான் படைத்தோன் தன் பதவி
மாருதி பெற்றால் பின்பு
தான் படைக்கில் உண்டாந்
தனி மருங்காள்
—மீன் பிடித்து
திக்காளுந்தே ரோன்றன்
தென்றற்காலங்கழிந்தால்
அக்காலந்தேராகும் அ

ஆகா! யானைகளையெலாம் நடுங்கச்செய்யும் தனங்களாம்! மலையை உவமை சொன்ன கவிஞனெல்லாம் செத்தான் போங்கள்! குவிந்த தனங்களாம்! அவன் (சுப்ரதீபன்) குத்துதனம் என்றான்; இவன் அதனை மென்மையாக்கி, குவிந்ததனம் என்கிறான்! நாட்டை அளந்த மகாவிஷ்ணு படுத்துத் தூங்குவதற்காக உள்ள ஆலிலைபோல் தோன்றும் வயிறாம்! நம்முடைய கடவுளெல்லாம் இது மாதிரி உவமையிலே தான் தூங்குகிறார்கள்; இவர்களல்லவோ கடவுள்கள்; வயிற்றில் உள்ள ரோமத்தில் தூங்கும் கடவுள்கள்! வாழ்க தோழர் மகாவிஷ்ணு! தனங்கள் இரண்டும் தாளங்களாம்; அதில் சுற்றிய கயிறு அதிலிருந்து தொங்குவதுபோல் ரோமம் அமைந்திருக்கிறதாம். ஆற்றில் வெள்ளம் சுழித்துக் கொண்டு ஓடுகிறதே, அது மாதிரி, உந்தியில் சுழியிருக்கிறதாம்! காற்றால் சிருட்டிக்கப் பட்டதுபோல், உண்டோ இல்லையோ எனக்கூறும்படி உள்ள இடையாம் - மம்முதனுக்குத் தேர் தென்றலாம்-அந்தத் தேர் ஓய்வெடுத்துக் கொண்டால், இவளை தேராக உபயோகித்துக் கொள்வானும்!

(தொடரும்)

ஊராளும் கூர்வாள் உறையில் வீழ்ந்தது!

கடந்த மாதம் 28ம் நாள் சென்னையில் நடைபெற விருந்த நடிகவேள் ராதா அவர்களின் "வால்மீகி ராமாயண" நாடகத்தை நமது காருண்யமுள்ள காங்கிரஸ் ஜனநாயக காமராஜர் சர்க்கார் தடை விதித்து விட்டதல்லவா? தடையை உடனடியாக ரத்து செய்துவிடும்படி முதலமைச்சர் காமராஜரைப் பேட்டி கண்டு நடிகவேள் ராதா அவர்கள் வற்புறுத்தியதுடன் தடையை நீக்கினாலும் நீக்காவிட்டாலும் இம்மாதம் 18ம் நாள் முதல் "ராதா ராமாயணம்" எனும் நாடகத்தை நடத்த ராதா முயன்று வந்தார்.

இதற்கிடையில் ராமாயணத்தின் சிறப்பை மக்கள், தெரிந்து தெளியவேண்டும் என்பதற்காக பெரியார் அவர்களும் ராதா அவர்களும் ராமாயண சொற்பொழிவாற்றி வருகிறார்கள்.

திராவிட மக்களை இழிவுபடுத்தும் பார்ப்பனீய புராணங்களைக் காப்பாற்ற இனி யாராலும் இயலாது என்பதையும், இத்தகைய பிரச்னைகளில் திராவிடர் இயக்கம்—தி.க. வானாலும் தி.மு.க. வானாலும்—தங்களுக்கிடையேயுள்ள பூசலை மறந்து உரிமைக்காகப் போராடும் என்பதையும் உணர்ந்து செப்டம்பர் மத்தியிலேயே தடையை நீக்க முன் வந்திருக்கும் காமராஜர் மந்திரிசபையை பாராட்டுகிறோம்! தடை நீக்கத்தையும் வற்புறுத்துகிறோம்!

அன்புசால் தோழரீர்!

திராவிட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வந்த அழைப்புகளுக்கு, முறையே பதில் எழுதமுடியாமற் போனதற்கு மிகவும் வருந்துகிறேன்.

மதுரை
கோயமுத்தூர்
பொள்ளாச்சி
திருப்பூர்
பெங்களூர்
திருவில்லிபுத்தூர்
வேலூர் (சேலம்)
சிதம்பரம் (இளைஞர் கழகம்)
போடிநாயக்கனூர்
நெல்லிக்குப்பம்
ந. பள்ளிப்பட்டி
லால்பேட்டை
நந்தி துர்க்கம்(கோலார்)
ப. நா. புதூர்
குன்னூர்
தேனி
தேவாப்பன்பட்டி
பெரியகுளம்
தேவாரம்
பூனைமேடு
தாதையங்கார்பேட்டை
தோடனேரி (சமயநல்லூர்)
உதகமண்டலம் (அண்ணா மன்றம்)
நெய்காரப்பட்டி

முதலிய பல இடங்களிலிருந்தும் இயக்க சகோதரர்கள், பல்வேறு தேதிகள் கேட்டு எழுதியுள்ளனர். தனித்தனியே பதில் எழுத முடியாமற் போய் விட்டது. நண்பர்கள் மன்னிக்குமாறு வேண்டுகிறேன். விரைவில் தேதி தருகிறேன்.

கண்ணதாசன்.

பிற்போக்கு என்னும் பெரும் பிற்போக்கினர்!

"திராவிட நாடு திராவிடருக்கே! திராவிடர் ஓர் தனி இனத்தவர்! அவர்கள் தனிப் பண்புடையோர்! அவர்கள் எந்த பிற இனத்தோடும் சரிசமமாக நிற்கக் கூடிய நாகரிகம் படைத்தவர்கள், எனவே அவர்களுக்கென்று தனி நாடு தேவை"

தி. மு. கழகக்தினர்.

"திராவிட நாடா? பிரிவதா? கூடாது கூடாது! இதற்கு அடிப்படையே இல்லை மார்க்ஸியத்தில் இதற்கு ஆதாரமே கிடையாது! "காப்பிடலில்" ". திராவிட நாடு" என்ற சொல்லே இல்லை. திராவிட நாடு என்பது சிலரின் வரட்டுக் கற்பனை பிரத்தியட்ச நடைமுறைக்கு ஏற்றது அல்ல. எனவே தனி நாடு கோருவது பிற்போக்குத்தனம்".

—கம்யூனிஸ்ட் காம்ரேடுகள்

"ஆண்டவன் ஒருவன்; அவனுக்கு உருவமில்லை, விருப்பு வெறுப்புமில்லை என்று கூறுகிற நீயே அவனுக்கு உருவமைத்து உணவு படைக்கிறாயே பக்தனே! சொல்வேறு செயல வேறாக இருப்பதுதானும்—என்ற எண்ணம் மடத்தனமானது. எனவே தகுதி உடையோரிடம் ஒப்படையுங்கள் நாட்டை!"

—தி. மு. கழகத்தினர்.

"காங்கிரஸை விட நன்றாக ஆளக் கூடியவர்கள் எவர் உளர் இந்தநாட்டிலே; இவர்கள் ஒற்றுமையை குலைப்பார்கள். இப்படிக் கேட்பது "நான் சென்ஸ்" காட்டு மிராண்டிச் செயல். சுத்த பிற்போக்குத்தனம்.

—கொடிதூக்கி தேசியத் தொண்டர்

* * *

இப்படிப்பட்ட உரையாடல்களை நாட்டிலே எங்கும் இப்போதெல்லாம் எவரும் கேட்கலாம். கேட்க முடியாதவர்கள் பத்திரிகையிலே படிக்கவும் முடியும்! தாங்கள் கூறுவதை பிறர் ஒருவர் சரி இல்லை என கூறினால் உடனே எவ்வித ஆதாரமுமில்லாமலே—காரணம் காட்டாமலேயே—"பிற்போக்குத்தனம்" என்று கூறி விடுவதை இப்பொழுது ஒரு "பாஷ"னாகக் கருதுகின்றார்கள் சிலர்.

மான கொள்கையைத் தீட்டிக் கொண்டு, தனக்கே உரியதான ஒரு பாதையில் போய்க் கொண்டிருக்கிறது என்பதை எவரும் அறிவர். நாள்தோறும் வேகமாக வளர்ந்து வரும் இயக்கம் இந்த நாட்டிலே ஒன்று உண்டு என்றால் அது தி. மு. கழகம் ஒன்றுதான் என மாற்றுக் கட்சி நண்பர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள், நம் தோழர்களை விட!

இதற்குக் காரணமும் எல்லோருக்கும் தெரியும்! தி. மு. கவிடம் ஒளிவு மறைவு இல்லை நேர்மையும் நாணயமும் நிரம்ப இருக்கிறது. வெளிப்படையாக வேலை செய்வது அந்த இயக்கம்"

இன்று ஒருவரை வானளாவ போற்றிப் பேசுவதும் அதற்கு அடுத்த நாளே அவரை துரோகி என்று தூற்றி தூக்கிலிட வேண்டும் என்ற சாதனமே இப்பொழுதில்லை என்று கூறும் குருட்டு மதியினரல்ல தி. மு கழகத்தினர்.

வால்டேரின் நூல்களிலே "அணுகுண்டைதடை செய்து உலக சமாதானத்தை நிலைநிறுத்துவோம்" என்ற சொற்கள் இருக்கின்றனவா என துருவித் துருவி ஆராய்ந்து பின்னர் இல்லை என கண்டு, "வால்டேர் பிற்போக்குவாதி" என்று எண்ணி ஏமாறும் ஏமாளிகளல்ல, தி. மு கழகத்தினர்.

மேற்கூறிய சீரிய பண்புகளெல்லாம் இருக்கிற காரணத்தாலேயே "பிற்போக்குத் தன்மை" என்று கூசாமல் குற்றம் சாட்டப்படுகிறார்கள் தி. மு. கழகத்தினர்—நாம்!

"கம்யூனிஸ்ட் தம்பி! திராவிட நாடு கேட்பது பிற்போக்குத் தனம் என கூறுகிறாயே! திராவிடம் பிரிந்தால், ஏன்

'கூட்டணி' கேட்டபோதுமட்டும் முற்போக்காயிருந்தோம்!

வாழாது, எக் காரணங்கள் பற்றி வாழ முடியாது என இது வரையில் உங்களில் எவராவது ஆதாரப் பூர்வமாக எடுத்துக் காட்டி இருக்கிறீர்களா—எழுதிக் காட்டி இருக்கிறீர்களா? இந்த வளமில்லை இவர்கள் கோரும் நாட்டில்—எனவே இவர்களால் நன்கு வாழ முடியாது என்று உங்களில் எவன் எடுத்துக்காட்டி இருக்கிறான்" என்று நாம் கேட்டால், அப்படிக் கேட்பதே "பிற்போக்குத்தனம்" எனக் கூறிவிடுகின்றனர் நம் மதிப்பிற்குரிய காம்ரேடுகள்!

அது மட்டுமா? "கம்பன் கண்ட தமிழகம்" இப்பொழுது ஏன்! பகுத்தறிவுப் பாசறையில் பயின்ற ஜீவாவா—தோழர் இராமமூர்த்தியாக இருந்தால் நமக்கு கவலையே இல்லை—மாடாதிபதி செய்ய வேண்டிய காரியத்தில் ஈடுபடுவது என்று நாம் கேட்டால் 'பிற்போக்குத் தனம்' என கூசாமல் கூறுகின்றனர் பொதுஉடமை பேசும் புனிதர்கள்!

பரந்த மனப்பான்மை வேண்டுமாம்! கூறுகிறார்கள் இந்த நாட்டிலே மிகமிகப்

ஆத்திகமா? நீ ஒரு ஏமாளி—அன்றேல் எத்தன்!"

—தி. மு. கழகத்தினர்.

"ஆண்டவன் இல்லை என்கிறான். அவனுக்கு அமுது படைக்கும் என்னை கிண்டல் புரிகிறான். இவனொரு நாத்திகன். மத நம்பிக்கை அற்ற பிற்போக்கு வாதி!"

—தொண்டரடிப் பொடியாழ்வார்

"நீங்கள்தான் சுதந்திரத்திற்காக செந்நீர் சிந்தினவர்கள்! மறுக்கவில்லை; அதனாலேயே நீங்கள் கோணல் வழி நடந்து நாட்டை சுடுகாடாக்கக் கூடிய உரிமை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று பொருளல்ல. சீதையைக் கண்டு பிடித்தவன் அனுமான் எனவே அனுமான்தான் சீதைக்கு கணவன் எனக்கூறினால் எவ்வளவு வேதனை கலந்த விசித்திரமாக இருக்குமோ அதே போன்றே இருக்கிறது உங்கள் வாதமும்! உரிமையைப் பெற்று தந்தவர்களே ஊராள வேண்டும்—உலுத்தர்களாக, உதவாக்கரைகளாக இருந்த போதி

"முட்டாளிடம் சொற்போர் நடத்தாதே! ஏனெனில் இருவரில் எவர் முட்டாள் என பார்ப்பவர் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடும்" என்று கூறி இருக்கிறான் மேல் நாட்டு அறிஞன் ஒருவன்! அதைப் போன்றதுதான் இதுவும்!

இந்நாட்டின் கம்யூனிஸ்ட் தோழர்களின்—அல்ல அல்ல—கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரே வார ஏடான "ஜனசக்தி"யில்தான் மற்றெல்லா பத்திரிகைகளையும் விட இந்த "பிற்போக்குத்தனம்" தலைவிரித்தாடுகிறது. தி. மு. கழகத்தைப் பற்றி எதை எழுதினாலும் இந்தச் சொற்களை அடைமொழியாக்க அந்தப் பத்திரிகை தவறுவதே இல்லை. நாம் வீணாக குற்றம் சாட்டுவதல்ல. இப்படி "ஜனசக்தி," ஆராவாரம் கண்ணுற நேருகின்ற தோழர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கென ஒரு தனி அமைப்பை வைத்துக்கொண்டு தனக்கென ஒரு திட்ட வட்ட

என கத்துவதும் தி. மு. க. இது வரையில் கண்டறியாதது; அதைப் பழக்கத்திலும் கொண்டு வந்ததல்ல!

தி. மு. க. எவருக்கும் அஞ்சினதில்லை; எவருக்கும் பயந்து தன் கொள்கைகளை கூறத் தவறினதுமில்லை என நாடே அறியும். தனக்கே உரியதான பாணியில் தன் கொள்கைகளை குவலயமறிய கூவி நிற்பதும் அந்த இயக்கம் ஒன்றுதான்!

ஆதரமில்லாமல் எதோ சில வார்த்தைகளை வைத்துக் கொண்டு வாணவேடிக்கை விளையாட்டில் ஈடுபடுபவர்களல்ல தி. மு. கழகத்தினர் அறிவின் தூதுவர்கள்! ஆற்றல் மிக்கவர்கள்! எங்கோ இருந்தவர் ஒருவர் எக்காலத்திலேயோ எழுதினதை வைத்துக் கொண்டு அதையே திரும்பத் திரும்ப பாராயணம் செய்யும் "கிளிப்பிள்ளை"களல்ல தி. மு. கழகத்தினர்.

ஷேக்ஸ்பியரின் நூற்களிலே எந்த ஓர் இடத்திலும் ரேடியோவைப் பற்றி ஒரு சொல்லும் குறிப்பிடப்படவில்லையே என்பதற்காக ரேடியோ

பித்தந் தெளியாதோ! ஐயோ, இவர் பித்தந் தொலையாதோ!

நாகாவாக் காரணத்தால் சோகாத்த தோழரிவர்!

பரந்த மனப்பான்மை கொண்டவன் ஒருவன் இருந்தான்! அவன் தான் இயற்பகை! தன் மனைவியை பிறனொருவனுடன் அனுப்பும்,'' பெருங்குணம்' கொண்டோன்! பரந்த மனப்பான்மையினன்! அவனுடைய பரம்பரையிலே வந்தவர்களைப் போல பேசுகின்றனர் இவாகள்! பரந்த மனப்பான்மையாம் பரந்த மனப்பான்மை!'' அப்படிப்பட்ட மனப்பான்மை நமக்குத் தேவையே இல்லை. அந்த விஷயத்தில் நாம் "குறுகிய மனப்பான்மை''யினராகவே எப்போதும இருக்க விரும்புகிறோம்.

இதை நாம் எழுதக் காரணம் என்ன என்று கேட்பர் தோழர்கள்! சில வாரங்கட்கு முன் வெளிவந்துள்ள "ஜனசக்தி''யில் பதில் சொல்லுகிறோம் என்ற பகுதியில் கீழ் வருகின்ற சொற்கள் காணப்படுகின்றன,

"..........தி. மு. க. வைச் சார்ந்த கீழ்த்தரமாக எழுதும் ஏடுகளில் ஒன்றான "தென்றல்'' எழுதியிருக்கக் காரணம்...—''

வின்மேல்! அதைவிடவா இது பிரமாதம் என்று தான் நமக்கு தோன்றுகிறது.

குடியாத்தம் தொகுதியிலே நடைபெற்ற தேர்தலைப்பற்றி ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள், "எண்ணம்'' என்ற பகுதியிலே எழுதின காரசாரமான கட்டுரையைப் படித்த பின்புதான் பொது உடமைவாதிகளுக்கு இந்த ஆத்திரம் வந்திருக்கிறது எனக் கூறத் தேவை இல்லை

உலகத்திலேயே செய்திகளை திரித்துக் கூறுவதில் கை தேர்ந்தவர்கள் இந்த கம்யூனிஸ்ட்காரர்கள் தாம்! இது பிற்போக்குத் தன்மையாக தோன்றுவதில்லை அவர்களுக்கு!

நம் நாட்டிலே தொழிற்சங்கங்களில் அத்தோழர்கள் செய்கின்ற தில்லுமுல்லுகளும் பொய் பிரசாரங்களும் அந்தந்த வட்டாரத்திலுள்ள தோழர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்கிற காரணத்தால் அவற்றை இங்கு விவரிக்காமல்

அழுத்தம் திருத்தமான கேள்வி'' என்று எழுதி இருக்கிறது கூசாமல்.

நம மும்முனைப் போராட்டத்தைப் பற்றி "நியூயார்க் டைம்சில்'' வெளிவந்த செய்தியை மக்களிடையில் கூறுவதில் தவறென்ன? இங்குள்ள "இந்து''வே பிரசுரப்பதில்லையே நம் செய்திகளை முன்பெல்லாம். இப்பொழுது பாருங்கள். உலகத்தின் ஒரு கோடியிலுள்ள நாடுகட்கும் எட்டும் விதமாக நம் செய்திகள் செய்தித் தாள்களில் முரசறைகின்றன என எடுத்துக் காட்டத்தான், "நம்நாடு'' இந்த செய்தியை பிரசுரித்துள்ளது. இப்பொழுது எந்த காரிருளும் நம்மை மறைக்க முடியாதபடி ஒளி ஏறி உள்ளது நம்மிடம். வலுப் பெற்று விட்டோம்—எனக் காட்டத் தான் இச்செய்தி! இது எப்

மாலடோவிற்கு "திராவிட நாடு'' பிரச்சனை தெரியாது தான். அதற்காக அவரை பிற்போக்குவாதி என கூறுகிறோமா நாம்? அப்படி கூறுனல் அது அறி உடமை யாகுமா?

எனவே அறிஞர்கள் எங்கிருந்தாலும், எந்த முகாமிலிருந்தாலும், நாம் பாராட்டத் தான் செய்வோம். திராவிடத்திலே கலை வளர்ப்பவர்களே நாம் தான்! அப்படிப்பட்டவர்கள் நெருக்கடியான நேரத்திலே, ரஷ்யாவிலிருந்து இங்கு வந்த கலை கோஷ்டியாரை வரவேற்க முடியாமல் போய் விட்டிருக்கலாம் என்றுதான் அப்பொழுது தி. மு. கழகத்தின் நிலை தெரிந்தவர்கள் கூறுவர். எத்தர்களும் பித்தர்களும் ஊரை ஏமாற்றி வாழவேண்டியவர்களும் தான் வேறு முறையில் கதைகட்டி விடுவார்கள் என்பது திண்ணம்.

ரஷ்யக் குடை; அமெரிக்கச் செருப்பு—இரண்டும் வேண்டாம் திராவிட பூமிக்கு!

நம் பத்திரிகைகள் "பிற்போக்குத் தன்மை'' கொண்ட பக்திரிகைகளாம், கீழ்த்தரமான பத்திரிகைகளாம். எது பிற்போக்குத் தன்மை என முன்பே கூறி இருக்கிறோம். "மாஸ்கோவா காஞ்சிபுரமா'' என்ற கட்டுரையை, ஆதாரப் பூர்வமான செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எழுதி, தி.மு. கழகத்தைச் சார்ந்த பத்திரிகை ஒன்று வெளியிடுவதாலேயே அது "கீழ்த்தரமான'' பத்திரிகை ஆகிவிடமுடியுமா? என்ன பேதமை! எவ்வளவு அறியாமை! நாம் பரிதாபப் படுகிறோம் இவர்களும் தங்களை கம்யூனிஸ்ட்டுகள் எனக் கூறிக் கொள்ளுகிறார்களே என எண்ணி!

இது ஒன்றும் பிரமாதமானதல்ல அவர்களுக்கு! இதுவரையில் எவருமே கூறத்துணியாத —கூறினல் பிறர் தம்மை மடையர்கள் எனக் கருதி விடுவார்களே என அஞ்சிய— சொற்களை எடுத்து வீசியது "ஜனசக்தி'', "சொர்க்க வாசல்'' விமர்சனத்தை எழுதும்போது; அறிஞர் அண்ணா விட்டு விடுகிறோம், விரியுமென அஞ்சி!

இந்தச் செய்தியைப் படியுங்கள். 27-2-1954 அன்று "ஜனசக்தி'' யில் வெளி வந்த கட்டுரையின் ஒரு பகுதி இது. ஈட்டி முனை என்ற தலைப்பில் "பகிஷ்கரித்த மர்மம்?'' என்ற துணைத் தலைப்பில் வந்த செய்தி இது! சோவியத் நாட்டு கலாகோஷ்டியை நாம் பகிஷ்கரித்தோமாம், அதற்கு காரணம் கூறவந்த ஜனசக்தி, "சமீபகாலத்திய அவர்களது எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் ஒரு புது விதமான தொனி தோன்றியுள்ளது. திராவிடத்தின் குரல் நியூயார்க்கில் (அமெரிக்காவில்) எதிரொலிப்பதாக அதன் தலைவர்கள் பேசுகிறார்கள். நியூயார்க் டைம்சில் திராவிடத்தின் குரல் ஒலிப்பதாக "நம்நாடு'' பத்திரிகை சமீபத்தில் பெருமையுடன் பிரசுரித்தது. இவ்விதம் புதிதாகத் தோன்றிய இந்த அன்பு, பாசம் ஒருகால் சோவியத் கலாகோஷ்டியைப் பகிஷ்கரித்ததற்குக் காரணமாக இருக்குமா? என்பது தான் எல்லோரும் கேட்கக் கூடிய அவசியம், கேட்கவேண்டிய படி தவறும்? அதனல் நாம் அமெரிக்காவின் அணியிலே சேர்ந்து விட்டோம் என திரித்துக் கூறிவிடுவதா? எவ்வளவு எத்தர்களாக இருந்தால் இப்படிக் கூற மனம் துணியும் என எண்ணிப் பாருங்கள். வேடிக்கையாக இருக்கும். அவர்களின் உண்மை உருவமும் தெரியும்.

நம்மைப் பொறுத்தவரையில், ஆப்ரகாம் லிங்கனும், லெனினும் நமக்கு ஒன்றுதான் எந்தவிதமான வேற்றுமையும் நமக்குத் தெரியவில்லை. இருவரும் விடுதலை வீரர்கள்தாம்! அமெரிக்கா இன்று முதலாளிகளின் முகாமாக இருக்கின்றதே என்ற காரணத்திற்காக ஆப்ரகாம் லிங்கனின் புகழை குறைத்து மதிப்பிட நாம் தயாராக இல்லை. அமெரிக்காவில் பிறந்துவிட்ட காரணத்தாலேயே இங்கர்சால், பிற்போக்கு வாதியாக நாம் கருதி விடமாட்டோம். மாற்றார் தோட்டத்திலே பூத்த முல்லைக்கு மணம் இல்லை என பேசிடும் பித்தர்களல்ல நாம்! சான்றாகத் தான் இதை எடுத்துக் காட்டினேம். இதைப் போன்ற எண்ணற்றவைகளை எடுத்துக்காட்ட முடியும் நம்மால்! எப்படி எப்படி எல்லாம் பொய் பிரச்சாரங்களைச் செய்து, தி. மு. கழகத்தின் தூய்மையின் மேல் மாசு தூவ முயலுகிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டுகிறோம்.

நாணயமாக உண்மைச் செய்திகளை மக்களுக்குக் கூறும் நாம் பிற்போக்குவாதிகளா அன்றி பொய்ப் பிரசாரத்தினலே கட்சி உயிர் வாழ வேண்டிய நிலையிலே உள்ள அவர்கள் பிற்போக்கு வாதிகளா என சிந்திக்க வேண்டும். எனினும் நாம் அவர்களை அந்த சொற்களால் அழைக்க விரும்பவில்லை. இதுவரை அழைத்ததுமில்லை.

"அமெரிக்கக் கனவு'' கண்டு திடுக்கிட்டு அந்த பழியை கண்டவர் மேல் போடும் பழக்கம் இங்குள்ள கம்யூனிஸ்ட் அன்பர்களுக்குத்தான் உண்டு.—மா. நெடுஞ்சேரலாதன்

அண்ணாவின் தம்பிகள் நாம், திண்ணரும் நெஞ்சுடையோம்!

சுகம் எங்கே !

(ஒரு இறுதி விளக்கம்)

12-9-54 ந்தேதி யன்று, சென்னை வண்ணாரப்பேட்டையில் நடைபெற்ற ஒரு நாடகத்தில், என்னைப்பற்றி, பேசத்தகாத வார்த்தைகளையெல்லாம் ஒரு நடிகர் பேசியதாக வண்ணாரப் பேட்டைத் தோழர்கள் பதினெட்டுப்பேர் கையெழுத்திட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர். இதை ஒரு பொருட்டாக்கி, நான் அதை வளர்க்கக் கூடாதென்றும் நண்பர்கள் கோரியுள்ளனர். இதையே இராயப்பேட்டை, மவுண்ட் ரோடு, எழும்பூர், பிராட்வே தோழர்கள் சிலரும் குறிப்பிட்டு, "சுகம் எங்கே"— "அம்மையப்பன்" இரண்டும் ஒன்றாகத் தோன்றக் காரணம் என்ன என்பதற்கு சரியான விளக்கம் தரவும் கோரியுள்ளனர். நாடகத்தைக் குறைந்த அளவு மக்கள் பார்த்திருந்தாலும் அது நகரம் முழுவதிலும் பரவி, பல தோழர்கள் கண்ணீர் வடிக்கக் காரணமாயிருந்து விட்டதால், உண்மையைக் கூறி பொது மக்களைத் தெளிவு படுத்திவிட விரும்புகிறேன். இந்த விளக்கம் கொடுக்க நான் முற்பட்டது, முடிந்த கதையை மீண்டும் தொடர்வதற்காக அல்ல ; பிரச்சினையைத் தெளிவு படுத்தினால் தான் ஒருவரைப்பற்றி ஒருவர் குற்றம் சாட்டுவதற்கு முடிவு ஏற்படும் என்ற நல்லெண்ணத்தினால்தான். யாருடைய மனதையும் இது புண்படுத்திவிடக்கூடாது என்ற பொறுப்புணர்ச்சியுடனேயே நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளேன்.

கண்ணதாசன்

"சுகம் எங்கே" படம் சமீபத்தில் வெளியானதை நண்பர்கள் பார்த்திருக்கக்கூடும். படம் பார்த்த நண்பர்களுக்கு நியாயமாக எழக்கூடிய சந்தேகத்தை நிவர்த்திப்பதே இந்த விளக்கத்தின் நோக்கம்.

சந்தேகங்கள் :

1. கதை, 'அம்மையப்பன்' நாடகக் கதையைப் போலவே உள்ளது.

2. வசனங்களிலும் கருணாநிதி வசனங்கள் போல் நிறைய இருக்கின்றன.

3. இதில் கண்ணதாசன் பங்கு என்ன ?

4. இயக்கத்திலே உயிரோடு உயிராகக் கலந்து பழகிய இருவருக்கிடையில் இது எந்த வகையில் பகை மூட்டியது ?

இந்த சந்தேகங்களுக்கு விளக்கம் இதுதான். கதையின் மூலம் '**ரெயினால்ட்ஸ்**' என்ற ஆங்கில ஆசிரியன் எழுதிய '**சோல்ஜர்ஸ்வைப்**' என்ற ஆங்கில நாவல். இதைத் தமிழில் மொழி பெயர்த்து ஆரணி குப்புசாமி முதலியார் **தேவசுந்தரி** என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். இந்தக்கதையை மூன்று ஆண்டுகட்கு முன்பு, ஒரு படக்கம்பெனியினர், தோழர் கருணாநிதி அவர்களிடம் கொடுத்து வசனம் எழுதிக் கொடுக்கக் கோரினர். நண்பர் கருணாநிதி எழுதிக் கொடுத்தார். என்ன காரணத்தாலோ, பிறகு இதை நண்பர் மாடர்ன் தியேட்டர்ஸில் கொடுத்தார். சிறையில் இருக்கும்போது, அதைத் திருத்தி, சரித்திரப் பின்னணியோடு '**ரத்தக்கண்ணீர்**' என்ற பெயரில் அமைத்தார். அதையே, சிறை மீண்டு வந்ததும் **அம்மையப்பன்** என்ற பெயரில் நாடகமாக நடத்தினர். இதற்கிடையில் மாடர்ன் தியேட்டர்ஸார், ஏ. கே. வேலனை வைத்துத் திருத்தங்கள் செய்தனர். இச்செய்தி கேட்டு நண்பர் கருணாநிதி சேலம் சென்றார்; வாதாடினார்; அவர்கள், "நீங்களே எழுதிக் கொடுங்கள்; நாமே எடுப்போம்" என்றனர். கதை அமைப்பு மாற்றத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. "சாமியார் கற்பழிப்பது; கெட்ட வழியில் பிறந்த குழந்தை" இரண்டும் இல்லாமல் சமூகக் கதையாக எடுக்க மாடர்ன் தியேட்டர்ஸார் விரும்பினர். நண்பர் அதை ஒப்பவில்லை; காரணம், கதை அமைப்பை அது பலப்படுத்த உதவுவதாக அவர் கருதினார். இன்னும் அவர்கள் சிவாஜி கணேசனையாவது, கே. ஆர். ராமசாமியையாவது வைத்து அதை எடுக்க விரும்பினர். நண்பர், ராஜேந்திரனை விரும்பினார்; அவர்கள் ராஜேந்திரன் முகம் சினிமாவிற்கு ஏற்றதல்ல என்று கருதினார்கள். இந்த முரண்பாடு முற்றி நண்பர் சேலத்திலிருந்து திரும்பிவிட்டார். சென்னையில் அந்தக் கதையை நேஷனல் புரொடக்ஷன்ஸாருக்கு கொடுத்து **அம்மை யப்பன்** என்ற பெயரிலே அதை எடுக்க ஆரம்பித்தனர். மாடர்ன் தியேட்டர்ஸாரும் **அதை சுமார் எட்டாயிரம்** அடி வரையில் எடுத்து விட்டனர். அதன் பிறகு சில காட்சிகளையும் வசனங்களையும் வைத்து, மாற்றியும் கூட்டியும் குறைத்தும் தோழர் வேலன் எழுதிக் கொடுத்தார். படம் பன்னிரண்டாயிரம் அடியில் நின்றபோது, படத்தில் **'காமிக்'** குறைவாக இருப்பதாக மாடர்ன் தியேட்டர்ஸார் கருதி, என்னை எழுதும்படி கேட்டனர். நான் தயங்கினேன். காமிக் மட்டும் எழுதுவதால் தவறாகிவிடாதென்றும், மற்ற வசனங்களுக்கு பணம் தந்து உரிமையை தாங்கள் பெற்றுள்ளதாகவும் கூறினர். **நான் (சந்த்ரபாபு-முத்துலட்சுமி) புலவர் காமிக் எழுதிக் கொடுத்தேன். ஏழு பாடல்கள் எழுதிக்கொடுத்தேன். (கங்கை நதி தீரத்திலே, கண்ணில் தோன்றும் காட்சி, மகாராணி நான் இனி மேல், மையல் கொண்ட மன்னருக்கு, ராசி பலன், ஒண்ணு ரெண்டா எது, என் அண்ணா) ஆகிய பாடல்கள். இதில் கடைசிப் பாட்டு வெட்டப்பட்டு விட்டது.** இவ்வளவுதான் "சுகம் எங்கே" படத்தில் என் பங்கு. **சேர்த்துப்பார்த்தால், சில காட்சிகள் மட்டுமேநான்எழுதியவையாக இருக்கும்.**

மேலும் படத்தில் என் பெயர் போடவேண்டாம் என்றும், போடுவதானால் காமிக்-கண்ணதாசன் எழுதியது என்று போடும்படியும் வேண்டினேன். அவர்கள், மொத்தமாக என்பெயரையும் சேர்த்து விட்டனர். **இதுபற்றி, படம் வெளியாகு முன்பே, 28-8-54 உ தென்றலில் கேள்விப்பெட்டி பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இதற்கிடையில் எனக்கும் நண்பருக்குமிடையில் கட்சிக்குச்சம்பந்தமற்ற சிலர் செய்த திருவிளையாடல்கள், எங்களையும் பேதப்படுத்தி, கட்சித் தொண்டர்கள் - இடையறாத உழைப்பாளிகளின் மனதையும் புண் படுத்திவிட்டது.

'சுகம் எங்கே' கதையின் கதை இதுதான். சுருங்கச் சொன்னால், கதை ஆங்கில ஆசிரியனுடையது; முழுக்க முழுக்க. இதில் என் பங்கு சில காட்சிகள் தான். பாடல்கள் 6; அவ்வளவுதான்.

இந்த விளக்கம் நான் என்றும் கொடுத்தாக வேண்டியதாகும். இல்லையேல். "ஆகா! திருடிவிட்டார்கள். ஊஹூ! களவாடி விட்டார்கள்" என்கிற அபாண்டத்தை ஏற்றுக் கொண்டவனாவேன். 'திருடி வாழவேண்டிய நிலை' எனக்கில்லை என்பதை நான் கூற வேண்டியதில்லை. ஏதோ, நான் பெரிய **மேதை** அல்ல என்றாலும் முறையாகப் படித்திருக்கிறேன். பட உலகில், படித்தவர்களால் பாராட்டப்பட்ட '**இல்லறஜோதி**'யை உண்டாக்கிக் காட்டியிருக்கிறேன். தென்றலில் நான் எழுதி வருவதும் நண்பர்களால் படிக்கப்படுகிறது. ஆகவே என்னைப் பற்றி, நான் சுய கற்பனையாளன் என்று தமுக்கடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கில்லை.

1300 விஷயங்கள் !

நமது எழுத்தாளர் நண்பர்கள் 'தென்றலுக்கு இதுவரையில் எழுதி அனுப்பியுள்ள விஷயங்கள் மொத்தம் 1300! இவற்றிலே கவிதைகளே அதிகம் காணப்படுகின்றன. திராவிடம், சங்க காலப் பெருமையை நன்கு உணர ஆரம்பித்து விட்டது என்பதற்கு இது சான்று. இவற்றை நன்கு ஆராய்ந்து நல்ல விஷயங்களை தென்றலில் பிரசுரிக்கவும், மற்றவற்றைத் திருப்பி அனுப்பவும் முடிவு செய்துள்ளோம். அந்த முடிவு தெரியும்வரை, நண்பர்கள் கடிதம் எழுதவும் வேண்டாம்; தென்றலிலிருந்து பதிலை எதிர்பார்க்கவும் வேண்டாம். நல்லவை நிச்சயம் இடம் பெறும்.

—ஆசிரியர்

கட்டபொம்மன்

[முன் இதழ் தொடர்ச்சி]

காலாடி : எங்கே போகிறார் ?

வீரன் : எங்கே புறப்படுகின்றார் ?

சூரன் : எங்கு நோக்கிப் போகின்றார் ?

கொண்டையன் : எங்கேயோ போகின்றார் !

விகடகவி : பூ............இவ்வளவுதானா ? போங்கப்பா போங்க !

எல்லோரும் : எங்கள் அரசர் எங்கே போகிறார் ?

விகடகவி : அப்படி வாருங்கள் வழிக்கு, வெள்ளைத் துரையை..........

சூரன் : கொல்லப் போகின்றாரா ?

வீரன் : அட ! நீ ஒண்ணு-அடித்து ஓட்டப்போவார்.

விகடகவி : இல்லையப்பா ! இல்லை. ஜாக்ஸன் துரையைப் பேட்டி காணப்போகிறார்......

எல்லோரும் : என்ன ! எங்கள் அரசரா ?

(உணர்ச்சி யற்று நிற்றல்)

விகடகவி : ஆமாம் !"ஆமாம் ! ஆமாம் !

வீரன் : மன்னாதி மன்னரெல்லாம் மண்டியிட்டு நிற்கும் எங்கள் மாவேந்தரா பேட்டிகாணப் புறப்படுகின்றார் ?

சூரன் : சிறு நரிக் கூட்டத்தைக் காண சிங்கம் புறப்படுகின்றதா ? என்ன காலக்கொடுமை ?

விகடகவி : காலக்கொடுமை யல்ல ! காட்டிக்கொடுக்கும் கொடுமை ! அநுமாரும் விடணரும் அளவுக்கு மிஞ்சியதால் ஏற்பட்ட கொடுமை !

கொண்டையன் : யார் அந்த அநுமான் ?

வீரன் : யார் அந்த விடணன் ?

விகடகவி : ஆரியனைப் போற்றி அண்ணனைக் காட்டிக் கொடுத்து அரியாசனம் ஏறி ஆட்சி புரிந்து அடிமைப் பட்டம் பெற்றவன்தான் அந்த விடணன்.

தன்னினத்தான் தலைசாய்வதை அறியாமல் அன்னிய நாமம் மேற்றியவன்தான் அந்த அநுமான் !

கொண்டையன் : இவர்கள் அன்றைக்கு வாழ்ந்தவர்கள் ......இன்றைக்கு.........

விகடகவி : இன்றைக்கும்தான் வாழ்கின்றனர்... ஆட்சிப் பீடம் தனக்கு வேண்டுமென்று வேற்று நாட்டானின் கால் களிலே வீழ்ந்து கிடக்கின்றான் ஒருவன் வீடண உருவத்தில்...... அவன் பாதம் போற்றி ஆட்சி கிடைத்தால் போதுமென்று அநு மாராக வாழ்கின்றான் மற்றவன்............இந்த நீசர்கள் வாழும்வரை நேர்மைக்கு இடம் ஏது ? புறப்படுங்கள் எல்லோரும்......ஜாக்ஸன் பேட்டியிலே......பந்தியிலே நாமும் இருப்போம் ! புன்முறுவலாயிருந்தால் பூரிப்போடு வருவோம் ! போர்ப்புன்னகை என்றால் விறிட்டெழுவோம் ! வெற்றி பெறுவோம் !

கொண்டையன் : புறப்படுவோம் !......

காட்சி 13

(ஜாக்ஸன் அரண்மனை—கட்டபொம்மன் பேட்டிகாணவருதல்)

காவலன் : (விரைந்து ஓடிவந்து) து ரை க ளே ! வணக்கம் !

ஜாக்ஸன் , என்னடா ?

காவலன் : காட்டு வழியில் பெரும்படை யொன்று ஓட்டமும் நடையுமாய்.........!

ஜாக்ஸன் : ஈம்......பேட்டி காணவரும் பாஞ்சை நாட்டானாயிருக்கும்.........(மேன்மாடத்திலிருந்து எட்டிப்பார்த்து) பேட்டி காணப் பெரும்படையா ?

காவலன் : இந்நாட்டு மன்னர் மரபு மறவாது நடக்கும் பிரபு அவர்.........

ஜாக்ஸன் : மரபிற் பிறழா பிரபு இந்த மண்டலத்தையே இழக்க நேர்ந்தால்......

(கட்டபொம்மனின் தூதனொருவன் ஜாக்ஸன் அறையிற் புகுந்து)

தூதன் : விட்டுக்கொடார் கட்டபொம்மு ! அவர் கட்ட பொம்மு அல்ல ! கெட்டி பொம்மு !

ஜாக்ஸன் : தூதனே ! என்ன செய்தி ?

தூதன் : எண் திசையெலாம் போற்றும் எங்கள் வீரர் ! வன்திறல் வாய்ந்தோர் ! கட்டபொம்மு நாயக்கர் தம்பரிவாரங்களோடு துரைகளைப் பேட்டிகாண வந்திருக்கின்றார்........... முன்னறிவிப்பிற்காக......வந்த தூதனே யான் ! (வீரர்களின் ஆரவாரம் கேட்கின்றது)

ஜாக்ஸன் : (மாடிமேலிருந்து பார்க்கின்றான் நீழே படையுடன் கட்டபொம்மு வந்து சேர்கின்றார்) எங்கே ! கட்டபொம்மன் ?

தூதன் : இதோ......

ஜாக்ஸன் : பாஞ்சாலங்குறிச்சிப்பட்டது வேந்தரே !

கட்டபொம்மன் : ஜாக்ஸன்......?

ஜாக்ஸன் : ஆம் ! நான்தான் ! பேட்டிகாண ஓலை நீட்டியவனும் இங்கு உம்முடன் நின்று பேசுபவனும் நானேதான் !

கட்டபொம்மன் : பேட்டி காணும் இடம் ஏட்டில் தீட்டப் பெறவில்லையே ?

ஜாக்ஸன் : மாடிக்கு வந்தால் வாடிக்கையாகப் பேசலாம்!

சேனைத்தலைவன் : படையின்றித் தனித்துப் பேட்டி காணும் பழக்கம் எமது அரசர்க்கு இல்லை. ஏன் ? இந்த நாட்டுப் பரம்பரைக்கே இல்லை.

ஜாக்ஸன் : அழைத்தால் பேட்டி காணவரும் வழக்கம் மட்டும் உங்கள் அகராதியில் உண்டுபோலும் ! வேடிக்கையாயிருக்கிறது—உங்கள் விநோதப் பேச்சு !

கட்டபொம்மன் : வேடிக்கையுமில்லை ! விநோதமும் இல்லை...பேட்டி இத்துடன் முடிந்தமைக்குப் பெருமகிழ்ச்சி ! வருகின்றோம் ! அறப்போரில் வெல்வோம் என்றெண்ணினோம்! அது அறிவுடையோர் முன்தான் பயன்தரும் என்பதை இன்று உணர்ந்தோம் ! வருகின்றோம் !......

ஜாக்ஸன் : நண்பர் கட்டபொம்மு நாயக்கரே ! நாடெல்லாம் புகழ்வீரர் ! தமிழ் நாட்டின் தலைசிறந்த தளபதி ! பாஞ்சாலங்குறிச்சியின் பட்டத்து வேந்தர்—வெள்ளையர் ஆட்சியை வெறுத்து எதிர்க்கும் வீரர்—என்றெல்லாம் நாடு புகழ்கின்றது உம்மை ! நீவிரோதனித்துப் பேட்டி காணத் தயங்குகின்றீர் ! (சிரித்தல்) அருந்தமிழ் நாட்டின் அரிய சொத்து அச்சம் ஒன்று தானே ? தனித்துக் காணத் தயக்கம்...... ...!

வெள்ளையத்தேவன் : என்ன சொன்னாய் ? எந்த நாட்டானின் உப்பினை உண்டு உடல்கொழுத்தாயோ! அந்த நாட்டானை அவமதித்துப் பேசிய உன் நாக்கை இந்நேரம் துண்டித்திருக்க வேண்டும் ! ஆணவத்தால் அறியாமையிற் சிக்கி அறிவிழந்து பேசாதே !......முதன் முறையாக.........

ஊமைத்துரை : இவனுக்கு மன்னிப்பா ! (சுருள் வாளி னைச்சுழற்றுகின்றான் ஊமைத்துரை. ஜாக்ஸன் நடுங்குகின்றான்)

கட்டபொம்மன் : வீரனுக்குக்குரிய வீர வாளினைப் பேதையிடம் காட்டிப் பெரும்பழி ஏற்காதே ! பொறு தம்பி பொறு ! புலியிடம் பாய்ச்சல் காட்டவேண்டும். இந்தப் பூனையிடமல்ல ;

ஜாக்ஸன் : (தயங்கியவன்போல நடித்து) வீரபாண்டியக் கட்டபொம்மு வேந்தரே ! உங்கள் பெரும்பண்புகளையும் பெருமைகளையும் உணராதவர்களா நாங்கள் ? இருந்துண்டு செல்வீர்கள் என்பதால் விருந்திற் கழைத்தோம் ! வருந்தாதீர் ! வாரும் ! விருந்துண்டு போகலாம் ! தனித்துப் பேட்டி காண்பதில் இன்னுமா தயக்கம்.........வாரும் ! வாரும் !!

கட்டபொம்மன் : தம்பி !......(புறப்படுதல்)

ஊமைத்துரை : போகவேண்டாம் ? அண்ணா ! போக வேண்டாம் ! வஞ்சகத்தால் நம்மை வரால் மீன்களாக்கிச் சூழ்ச்சித்தூண்டிலைப் போடுகின்றான் இந்த ஜாக்ஸன்...போக வேண்டாம் அண்ணா ! போகவேண்டாம் !

கட்டபொம்மன் : வேண்டாம் ! பிறந்த பொன்னாட்டின் பெயரைக் கெடுத்து நாம் பேடிகளாக வாழவேண்டாம் ! தனித்தே பேட்டி கண்டு வருகின்றேன்......கவலை தணிந்திரு நேர்மையுடையாரென்று நேர் செல்லுகின்றேன். வஞ்சகம் தலைவிரித்து வாலாட்டுமானால்...வாளிருக்கிறது கையில்...... வன்மையிருக்கிறது உடலில்...உரம் இருக்கிறது நெஞ்சில்... படைஞர் இருக்கின்றனர் பக்கத்துணைக்கு......பார்க்கலாம் ஒருகை...பார்த்து வருகின்றேன்.

காட்சி 14

(ஜாக்ஸனின் தனியறையில் கட்டபொம்மனும் ஜாக்ஸனும் சந்திக்கின்றனர்.)

ஜாக்ஸன் : பாஞ்சாலங் குறிச்சிப் பட்டத்து வேந்தரே ! வாரும் ! வாரும் !! அரியாசனம் இல்லை என்றாலும் அமர ஆசனம் இருக்கின்றது அமரும் ! (கட்டபொம்மன் ஆசனத் தமர்தல்; ஜாக்ஸன் சினத்துடன்)

நீர் துகாதன செய்ததாக உம் மீது புகார் பல வந்திருக்கின்றன. எமது கடிதங்கள் கிடைத்தனவா உமக்கு?

கட்டபொம்மன் : ஆம்!

ஜாக்ஸன் : எல்லாவற்றிற்கும் பதில் எழுதியிருக்கின்றீரா?

கட்டபொம்மன் : தேவையானவற்றிற்குப் பதில் தீட்டியுள்ளேன்!

ஜாக்ஸன் : ஆத்தூர் ஆறுமுகமங்கலம் இவற்றை நீர் அடமாகக் கைக்கொண்டிருக்கின்றீர்!

கட்டபொம்மன் : தேவையற்ற பேச்சு! நாட்டுக்கு உரியவர்கள் நாங்கள். ஆத்தூர் ஆறுமுகமங்கலம் எனது ஆளுகைக்கு உட்பட்டது. வீட்டினுள் இருக்கும் பொருள்கள் வீட்டுக்காரனுக்குத்தானே சொந்தம்! எமது நாட்டு ஊர்கள் எமக்குத்தானே சொந்தம்! அன்னியர் புகுவதில் அர்த்தமொன்றும் இல்லையே!

ஜாக்ஸன் : வேற்று நாட்டில் புகுந்து காட்டு ராஜாக்கள் போல அல்லல் பல புரிந்து கொள்ளையடித்து வருவது உண்மை தானே!

கட்டபொம்மன் : இல்லை.........மக்களை மக்களாக மதித்து மாண்புடன் நடத்துவது எங்கள் நாட்டுப் பண்பு; வருவிருந்தோம்பி வந்தவர்கட்கெல்லாம் வாரிக்கொடுப்பது எங்கள் நாட்டாரின் வாழ்க்கை; குடிமக்களைப் பேணி செங்கோல் ஓச்சுவது எங்கள் குடிக்குணம்; குடிமக்களின் நலம் பேணுவது எமது குறிக்கோள்; இதைத் தவிர்த்து சொந்த நாட்டாரைச் சூழ்ச்சியால் அலைக்கழிப்பதும் அவர் பொருளை உண்டு அவர்கட்கே துரோகம் நினைப்பதும், கொள்ளையடிப்பதும் கள்ளம் புரிவதும், எங்கள் கொள்கையல்ல. ஒருகால் ஒண்டித்திரியும் சண்டிகளுக்கிருக்கலாம்; உங்களுக்குமிருக்கலாம்......

ஜாக்ஸன் : கட்டபொம்மன்! கொள்ளையடித்தது உண்மையா? இல்லையா?

கட்டபொம்மன் : கேட்கவேண்டியவன் நீயல்ல!

ஜாக்ஸன் : உரிமை இருப்பதால்தான் கேட்கின்றேன்...

கட்டபொம்மன் : ஜாக்ஸன்! காட்டுப் பூனை இடத்திலே விட்டெலி உரிமை கொண்டாடினால்.......விளைவு விபரீதமாகப் போய்விடும்......

ஜாக்ஸன் : பாளையப்பட்டெல்லாம் எம்மிடம் பணிந்து கப்பம் கட்டிக் கைகட்டி நிற்கும்போது நீர் மட்டும் கப்பம் கட்டுவது தப்பிதம் என்றீராம் (உறுமுகின்றான்) கப்பம் கட்டும்... இன்றேல் தப்பிதம் நேரும்! பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப்பட்டுப் பஞ்சாய்ப்பறக்கும்! கட்டபொம்மு நாயக்கர் பாளையப்பட்டு எட்டப்ப நாயக்கரின் இன்ப புரியாக மாறும் ஆமாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறும்!

கட்டபொம்மன் : உறுதியாக அறுதியிட்டு உரைப்பதும் இதுதான்—உயிர் நீங்கினும் மாறாத ஒப்பமும் இதுதான்! உண்மையும் இதுதான்!

ஜாக்ஸன் : கூறும்...!

பாளையப்பட்டு வேந்தன் வெள்ளைப் பரதேசிகளுக்குப் பணிய மாட்டான்! ஆண்ட பரம்பரையிலே தோன்றியவன் ஆண்டிகளுக்குப் பணிய மாட்டான்!

ஜாக்ஸன் : என்ன! பணியமாட்டானா? பாரெல்லாம் எம்மைக் கண்டு பணிந்து ஒடுங்கும்போது நீர் பணியமாட்டீரா? உம்மைக் கைது செய்திருக்கின்றேன்... இருந்த இடம் விட்டு அகலாதீர்!

கட்டபொம்மன் : வாள் வீச்சிற்கு அஞ்சாத கட்டபொம்மனா! உமது வாய் வீச்சிற்கு அஞ்சி அமர்ந்திருப்பான்... இதோபாரும்...(வாளுடன் போர்க்கோலம் பூண்டு எழுகின்றான்—ஜாக்ஸன் அஞ்சி ஓடுகிறான்—கிளார்க்துரை கட்டபொம்மனை எதிர்க்கின்றான்—கட்டபொம்மன் வாளைச் சுழற்ற கிளார்க் துரையின் தலை மண்ணைக் கவ்வுகிறது)

கட்டபொம்மன் : அழிந்தான் கிளார்க்! அழிந்தது ஆங்கிலேயரின் ஆணவக் கோட்டை....படைஞர் புறப்படட்டும் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி...

காட்சி 15

(சாலை வழியில் கொண்டையனும் காலாடியும் எதிர்ப்படுகின்றனர்)

கொண்டையன் : ஏண்டா காலாடி!

காலாடி : என்னுங்க தேவரே!

கொண்டையன் : நம்ம நாயக்கரு துரைப்பயலுங்களை பேட்டி காணப்போனாரே என்னடா ஆச்சு!

காலாடி : தெரியாதுங்களா? பேட்டி காணப்போனாருங்களா!

கொண்டையன் : போனார்...

காலாடி : வெள்ளைக் குரங்குகள் சண்டைக்கு வந்தன.....

கொண்டையன் : வந்தன.....

காலாடி : வந்தனவா? நம்ம நாயக்கரா சும்மாயிருப்பாரு! இரை கிடைத்த புலிமாதிரி பகைவர் மேலே பாயத் தொடங்கி விட்டார்—இருவரும் கத்திகளை எடுத்து இவர் வீச அவனுங்க வீச (திருப்பித்திருப்பிக் கூறல்)

கொண்டையன் : அடே! நிறுத்தப்பா! முடிவு என்ன?

காலாடி : கிளாக் துரையைக் கட்டபொம்மு ராசா வெட்டிக் கொன்று போட்டாரு.

கொண்டையன் : அப்படியானால் வெற்றி நமக்குத்தான்.

காலாடி : அங்கேங்க தேவரே?

கொண்டையன் : என்னடா?

காலாடி : தானாதிபதி அவர் தம்பியோட முப்பது நாற்பது வீரர்கள் வெள்ளைக்காரன் கையிலே சிக்கிக்கொண்டாங்க தேவரே! அப்படீன்னு அடுத்த வீட்டு வெள்ளைச்சாமி சொன்னானுங்க தேவரே!

கொண்டையன் : அப்படியானால் போருக்கு நீ போகவில்லையாக்கும்!

காலாடி : நான் எங்கே தேவரே! சண்டைக்குப் போக முடியும்! என் பெண்டாட்டி வயிற்றிலே.....

கொண்டையன் : என்னடா! இது கட்டிகிட்டி புறப்பட்டிருக்கா?

காலாடி : எட்டு மாதம்...

கொண்டையன் : குட்டிச் சுவராப் போச்சுபோ....... அதனாலே என்னப்பா?

காலாடி : அவள் தானுங்க தேவரே!

கொண்டையன் : என்னடா சொன்னாள்? (காலாடி பெண்ணாகவும் ஆணாகவும் பாடுகின்றான்)

பாட்டு

பெண் : போகதே போகாதே என் கணவா
பொல்லாத சொப்பனம் கண்டேனையா—ஐயா

ஆண் : கண்ட சொப்பனத்தைச் சொல்லாவிட்டால்
கத்தியால் குத்துவான் காலாடி

பெண் : இஞ்சிக் கிணறும் இடியக் கண்டேன்—அந்த
எலுமிச்சம் தோட்டம் அழியக்கண்டேன்
மஞ்சட் கிணறும் இடியக்கண்டேன்—அந்த
மல்லிகைத் தோட்டம் அழியக்கண்டேன்

கொண்டையன் : போடா அப்பாவி! பெண்டாட்டி என்ணத்திலே போரை மறந்துவிட்டான்...வீரத்திற்கு பிறகு தாண்டா காதல்.......

—சிலம்பின் செல்வன்

(தொடரும்)

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்!

நேஷனல் புரோடக்ஷன்ஸ்:

அம்மையப்பன்

மதரூஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ்
மேனகா

பத்மினி பிக்சர்ஸ்:
முதல் தேதி

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல்
நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம்
மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

அமோக ஆதரவுடன் விற்பனையாகிறது!
அன்னைத் தமிழகத்தின் அடிமைத்
தளையறுக்க, உரிமை முரசொலித்து உயிர்க்கனல்
மூட்டிய ஒப்பற்ற
மாவீரன்

கட்டபொம்மன்

வீர வரலாறு
நாடக உருவில்
எழுதியவர்: செ. அமலன்
கண்ணைக் கவரும் வண்ண முகப்பு
கருத்தினிக்கும் கலைப் படைப்பு
விலை ரூ. 2-8-0

விபரங்களுக்கு:—
வாணி விலாச அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்

வருகிறது!

வணங்காமுடி

வாரப் பத்திரிகை
தனி இதழ் அணா ஒன்று!

- சவுண்டிகளுக்குச் சவுக்கடி!
- சிவஞான ரகசியம்!
- அந்தரங்க ஊழல்கள்!
- கண்ணகி அச்சகம் வந்த கதை!
- காலிகளின் கூடாரம்!

ஆசிரியர்; வணங்காமுடி

எழுதுக:— வணங்காமுடி
சென்னை-14.

பி. கோதண்டன், ராயபுரம்

'மின்னல்' இடை என்கிறார்களே. பளிர் என்று மின்னி விட்டு ஓடிவிடுமோ?

ஆமாம்; அதோடு கண்ணையும் பறித்துக்கொண்டு, காதலில் தள்ளி விடும். காமத்துக்குக் கண் இல்லை என்கிறார்களே, ஏன்? அந்தக் கண்ணை, இடையாகிய மின்னல் கெடுத்து விட்டது என்கிறான் கவி என்று கூடக்கொள்ளலாம்!

* * *

பெண்களைப்பற்றி புதிதாக ஏதாவது வர்ணிக்க நினைக்கிறேன்; உமது கருத்து என்ன?

என் அனுபவத்தையும் அறிவையும் பொருத்தவரை, முன்பிருந்த கவிஞர்களிலிருந்து பாரதிதாசன், வாணிதாசன் வரை எல்லோரும் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விட்டார்கள்! இனி ஏதாவது வர்ணித்தால், அது பழமையில் புதுமையாகத்தான் இருக்கும்.

* * *

கே. சரோஜினி, மாம்பலம்

'தென்ற'லை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. நான், விடாமல் படித்து வருகிறேன். பள்ளியிலும் எல்லோரும் படிக்கிறார்கள்; அவர்களுக்கும் பிடித்திருக்கிறது.

இருக்காதா! 'தென்றல்' என்ன சாமானியமா! நான் காற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

* * *

வி. நாராயணன், காரைக்குடி

அண்ணாத்துரை என்பது புனைபெயரா, சொந்தப் பெயரா?

அடப்பாவி! சொந்தப் பெயர் ஐயா!

* * *

பிரஜா-சோஷலிஸ்ட்—சென்னை

"தோழரே! பாரதியின் கொள்கைக் குழப்பம் ஏன்?" என்று கேட்டு, பதில் கூறிய நீர், பாரதிதாசனின் கொள்கைக் குழப்பத்தை ஏன் விட்டுவிட்டீர்?

"கோமகள் என்னைச் குறை
யிரந்தாள்—அவள்
கொள்ளை வனப்பிலே
காமனும் தள்ளிடக்
காலிடறிற்றுக்
கவிழ்ந்த வண்ணம்
வீழ்ந்தேன்"

என்பதில், **காமனும்** என்று மன்மதனைக் குறிப்பிடுகிறார் நாத்திகக்கவி. மற்றும்,

சுமை சுமையாய்உவப் பெடுக்க
உணர்வு வெள்ளம்
தூண்டிவிட
ஆ! ஆ! என்றான்—**வாணி**
அமைத்திட்டாள் நற்கவிதை
மழை போற் பெய்தான்!

என்பதில் **வாணி** என்று *சரஸ்வதியைக் குறிப்பிடுகிறார். இது கொள்கைக் குழப்பம் இல்லையா?*

இல்லை தோழரே! இல்லை. காமன் என்பது காதல் உணர்ச்சியை உருவகப்படுத்துவது. **காமனம்** அல்லது **காமனை** என்றால் விருப்பம், ஆசை என்று பொருள். அதைவைத்துப்பார்த்தால் ஆசையின் உருவகம் **காமன்** என்கிற விஷயம் புரியும். "விருப்பம் தள்ளிற்று; விழுந்தான்" இதுதான் பொருள். **'வாணி'** என்றால் **'சொல்'** என்று பொருள். 'வாணி அமைத்தாள்' என்றால், சொல், அமைத்தது என்று பொருள். புரிந்து கொள்ளும்!

பாளையங்கோட்டையில்

நமது பட்டாளம்!

நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் செப்டெம்பர் 18, 19 தேதிகளில் பாளையங்கோட்டை பவர் அவுஸ் எதிரிலுள்ள மந்திரம் அரங்கில் இரு பெரும் மாநாடுகளை சிறப்புற நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

முதல் நாள் நடைபெறவிருக்கும் சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு கண்ணதாசன் அவர்கள் தலைமை வகிப்பார். நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் மாநாட்டை திறந்து வைப்பார்.

இரண்டாம் நாள் நடைபெறவிருக்கும் அரசியல் மாநாட்டிற்கு தோழர் ஆசைத்தம்பி தலைமை வகிப்பார். தோழியர் பூங்கோதை மாநாட்டைத் திறந்து வைப்பார்.

அறிஞர் அண்ணா அவர்களும் இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றுவார்கள்.

முதல் நாளிரவு இசை விருந்தும், இரண்டாம் நாளிரவு நாடகமும் உண்டு. நமது பட்டாளம் பாளையங்கோட்டை நோக்கி புறப்படட்டும்!

ஈ.வி.கே.சம்பத் சொல்லுகிறார்

[பிரெஞ்சுப் புரட்சியை நாடறியும், அதில் ஒரு கட்டத்தை தோழர், சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் இக்கட்டுரையில் சொல்கிறார். பல்வேறு பொருள்பற்றி, இப்பகுதியில் அவர் பேசுவார். இது, புரட்சிக்கு முன்பு இருந்த பிரானசில் நடந்தது.]

1775-ம் ஆண்டு மே மாதம் 2-ம் நாள். இரவு மணி எட்டாகவில்லை. அரண்மனை முன் வாயிலுக்கருகே ஆயிரம் பேர் கொண்ட ஒரு கூட்டம் வந்து மன்னனைக் காணவேண்டும் என்று கூக்குரலிடுகிறது. அந்தக் கூட்டத்தின் தோற்றம் பயங்கரமாயும், பரிதாபமாயும் இருக்கிறது. காய்ந்த தலையினர். கந்தையணிந்தோர், ஒட்டிய வயிறுடையோர், வாழ்வு வழியனுப்பிவிட,மரணம் வரவேற்க, குழம்பிய நிலையில் கூக்குரலிடும் பட்டினிப் பட்டாளம். பஞ்சைகள்-நடமாடும் பிணங்களெனக் காட்சியளித்த அவர்களும் பிரெஞ்சு மாதாவின் சொந்தக் குழந்தைகள்தான். அவளுடைய மக்களில் ஒரு சிலர் மாளிகைகளிலும், மடாலயங்களிலும், அரண்மனையிலும் மந்தஹாச வாழ்வு நடத்துகின்றனர். உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, எண்ணற்றவர்கள் துடிக்கின்றனர். பசி என்னும் தேளால் தொடர்ந்து கொட்டப்பட்டவர்கள்-அரசனிடம் வந்திருக்கின்றனர் நம்பிக்கையோடு. "மன்னன் நல்லவனுமே. விரட்டப்பட்ட மக்கள் சபையைக் கூட்டுகிறான். ஆகவே பசியால் வாடும் நமக்கு ஒரு வழிகாட்டுவான்," என்ற நம்பிக்கையோடு அரண்மனை வாயிலில் வந்து கூடி மன்னரை அழைக்கின்றனர். கூட்டத்தின் கூக்குரல் கேட்டு அரசனும், அரசியும் உப்பரிகையிலிருந்த வண்ணம் கீழே குழுமியுள்ள கூட்டத்தைப் பார்க்கின்றனர். திகைப்பு மேலிடுகிறது. ஒருவரா, இருவரா பணியாட்களை விளித்து, பிச்சை போட்டனுப்ப! அவர்கள் கோரிவந்திருப்பது ஒருவேளை உணவோ. எனில், அதுவும் அல்ல. சமீபத்தில் அரசு பிறப்பித்த உணவுச் சட்டம் ஒன்றின் விளைவாக உணவின் விலை விஷம்போல் ஏறிக்கொண்டே போவதை தடுத்து, ரொட்டியின் விலையை மன்னன் நிர்ணயிக்க வேண்டுமென்பதே அவர்கள் கோரிக்கை. அவர்களது கோரிக்கைபடி விலையை நிர்ணயித்துவிடலாமா என்றுகூட மன்னன் ஒரு கணம் யோசிக்கிறான். இது போன்ற 'சபலபுத்தி' மன்னர்களுக்கு வரக்கூடாது என்பதை அவனுடனிருந்த அரண்மனை அநுபவஸ்தர்கள் நினைவூட்டுகின்றனர். மனிதனாக முயன்ற மன்னன் இறுதியில் மன்னனாகவே இருக்க உறுதி செய்து கோரிக்கைக்கு வழக்கமான அரண்மனைப் பதிலையே அளிக்கிறான். மன்னனின் மெய்ப் பாதுகாவல் படையினர் வாயிலில் நிற்கும் வறியவர்கள் மீது பாய்ந்து, சிலரைக் கைது செய்து, பக்கத்திலிருந்த மரமொன்றில் தூக்கில் இட்டுக் கொல்கின்றனர். மற்றவர்கள் அரசன் முன்னிலையில் முறை தவறி நடந்த குற்றத்திற்காக, துப்பாக்கிகளில் பொருத்தப்பட்டுள்ள சனியன்களால் (Bhyonet) குத்துண்டனர். மன்னனின் இப்பதிலை பிரான்ஸ் பதிவு செய்துகொள்கிறது.

முடியாட்சியை கவிழ்க்க இரண்டு நிலைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. ஒன்று அரசிக்கு அதிகாரத் துறையில் வளர்ந்து கொண்டே போன செல்வாக்கும், மக்களிடையே அவள் மீது வளர்ந்துகொண்டேயிருந்த வெறுப்பும் ஆகும். மற்றொன்று, நாட்டின் நிதி நிலைமை வர வர மோசமாகிக் கொண்டிருந்தது.

ஏழாண்டு மண வாழ்க்கைக்குப்பின் அரசிக்கு ஒருகுழந்தை பிறக்கிறது. பதினாறும் லூயிகணவனாய் இருக்க முடியுமே தவிர தந்தையாகும் ஆற்றலற்றவன் என்பது பிரான்ஸ் முழுதும் பிரசித்தி பெற்ற ஓர் ரகசியம் ஆகும். கணவன் லூயி, தான் தந்தையாக, மருத்துவர்களை பெரிதும் நம்பியிருந்தான். இறுதியாக மருத்துவர்கள் தோற்ற விடத்தில், அரசி வெற்றி பெற்றாள். மருத்துவர்கள் எவ்வளவு முயன்றும் லூயியைத் தந்தையாக்க முடியவில்லை. அரசி மேரி, அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்து லூயியைத் தந்தையாக்கினாள் மீண்டும் மூன்றாண்டுகளில் மற்றொரு ஆண் குழந்தையை ஈந்து லூயிக்கு பெரும் ஆறுதலை தருகிறாள். லூயிக்கு எப்படியோ தனக்குப்பின் பட்டத்துக்கு வர தன் மனைவி ஒரு ஆண் வாரிசை தந்தாளே என்று பேரானந்தம்.

ஆனால் லூயியின் தம்பிமார்களின் எண்ணத்தில் இடி வீழ்ந்தது. லூயியின் உடற்கூறை நன்கறிந்த அவர்கள் அவனுக்குப்பின் பட்டம் தங்களுக்கு வரும் என்றெண்ணிக் காத்திருந்தனர். ஆனால் தங்கள் அண்ணியின் துணிச்சல், அண்ணனுக்கு ஒரு மகனைத் தந்துவிட்டது என்பதை அறிந்ததும் அவர்களடைந்த ஏமாற்றத்துக்கோர் அளவில்லை. மேரியின் அந்தரங்க வாழ்க்கையை பற்றி நிறைய வதந்திகளைக் கிளப்பிவிட்டனர். அவளுடைய நடத்தையும் அவ்வதந்திகளுக்கு ஆக்கம் தரும் வகையில் அமைந்திருந்தது.

சதா உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு, வித் விதமான பூட்டுகள் செய்வதிலும் வேட்டையாடுவதை வேடிக்கை பார்ப்பதிலும் காலத்தைக் கழித்துக் கொண்டு அரசியை எட்டிக்கூட பாராமல் அரசன் வாழ்ந்து வந்தான். ஆனால் அரசி மேரியோஅழகு மிக்கவள். அந்த அழகு அனுபவிப்பாரில்லாமல் வீணாகக் கூடாதென்பதில் அக்கரை மிக்கவள். சதா தன்னைச் சுற்றி கேளிக்கையும், குதூகலமும் இருக்கவேண்டுமென்று ஆசையுடையவள். எண்ணித் துணிக கருமம் என்ற மூதுரையை அவளறியாள். ஆகவே பல தவறுகள் நடந்து முடிந்த பின்னரே நடந்தவைதவறுகள் என்பதை உணர்ந்தாள். 'சூது வாது' தெரியாதவள். ஆகவே ஒளிவுமறைவு தெரியவில்லை. எவர் எது சொல்லினும் ஒரு அரசிக்கு என்ன நேர்ந்துவிடும் என்ற முறட்டுத் தைரியத்தில் தனதுவாழ்க்கைமுறைகளையும், வழிகளையும் மாற்றிக் கொள்ள அவள் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. அரண்மனையை ஒருகேளிக்கைக் கூடமாக்கினாள், அரண்மனை விருந்துகளுக்கென 'பொன்னை வாரி வாரி இறைத்தாள். அரண்மனைக்கு வெளியில் பிரபுக்களின் தனி மாளிகைகளில் நடைபெறும் விருந்துகளுக்கும் நடனங்களுக்கும் அரண்மனைச் சம்பிரதாயங்களை மீறி அரசி செல்லத் தொடங்கினாள். அரசனும் தனக்கு தொல்லை தீர்ந்தால்போதும், அவளை மகிழ்விக்கும் பொறுப்பிலிருந்து தனக்கு விடுதலை கிடைத்தால் போதும், என்றெண்ணி அவளை இஷ்டப்படி அலைய விட்டான். வெளியிடங்களில் நடைபெறும் விருந்துகளை ஒட்டி நடைபெறும் நடனங்கள் தாம் அரசிக்குக் களிப்பூட்டின. நடனங்கள் என்றால் நம் நாட்டில் நடைபெறுவதைப்போல், ஒருவரோ இருவரோ ஆட பலர் கூடிக்காணும் நடன வகையல்ல. விருந்தில் கலந்துகொள்ளும் அனைவரும் ஆணும் பெண்ணுமாய் ஜோடி ஜோடியாக ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு ஆடும் நடனம். இரவு முழுவதும் இசை முழங்கிய வண்ணம் இருக்கும், நடனமும் நடைபெற்ற வண்ணமிருக்கும். இடையிடையே ஆடிக்களைத்த ஜோடிகள் கையில் மதுக் கோப்பைகளை ஏந்தியவண்ணம் கூடத்தைவிட்டு நில வொளி வீசும் தோட்டத்திற்கு சென்று களைப்புத் தீர 'கதை' பேசித் திரும்புவர். ஆட்டத்தில் விருந்து மேசையைச் சுற்றி அமர்ந்து உண்ணும் அவர்கள் பேசிக்கொள்வதனைத்தும் 'அவனும் அவளும்' ஆகத்தான் இருக்கும். விருந்தும் நடனமும் முடிந்து ஒவ்வொருவரும் வீடு திரும்பும்போது விடிந்துவிடும். இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அரசி மேரி ஒரு நடு நாயகமாய் விளங்கினாள்,

[தொடரும்]

வெளிவந்து விட்டது!

புத்தக உலகிலே ஒரு புரட்சி புதுமை இலக்கியத்திலே ஒரு புதிய பாதை

இரவில் நடந்தது

ரா. எழிலன்

தேன் நடை; சிலிர்க்க வைக்கும் சம்பவங்கள்; சுவை தரும் சொல்லடுக்கு! சுவாரஸ்யமான கதைப் போக்கு! சிந்தனையைத் தூண்டும் கருத்துக்கள். படித்துப் பயன்பெற வேண்டிய சிறு நாவல்!

விலை 4 அணா

மதராஸ்பப்ளிகேஷன்ஸ்

சென்னை-26.

Edited and Published by Kannadhasan, Printed by U. Ramaswamy at Bharathi Printers, 119, Broadway, Madras-1.